விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 366 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 04 வியாழக்கிழமை (19.12.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

நாட்டுக்கு அச்சுறுத்தலான

## எந்தவொரு உடன்படிக்கையும் கைச்சாத்திடவில்லை - விஜித ஹேரத்



(கொழும்பு)
நாட்டுக்கு அச்சுறுத்தலான எந்தவொரு உடன்படிக்கையையும் இந்தியாவுடன் தற்போதைய அரசாங்கம் கைச்சாத்திடவில்லை என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் பாராளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.
எட்கா உடன்படிக்கை தொடர்பில் தேசிய மக்கள் சக்தி எதிர்க்கட்சியாக இருந்து தெரிவித்த கருத்துக்களை 02

## ரூ.100 மில்லியன் நஷ்டஈடு கோரி

யாழ்.போதனாவின் பணிப்பாளர் சத்தியமூர்த்தியால் அர்ச்சுனா எம்.பிக்கு எதிராக வழக்குத் தாக்கல்

(யாழ்ப்பாணம்)
பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் அர்ச்சுனா இராமநாதனிடம் 100 மில்லியன் ரூபாய் நஷ்டஈடு கோரி யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி யாழ்.மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்துள்ளார்.
மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்ட நிலையில், குறித்த வழக்கு நேற்றுப் புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.
இதன்போது வழக்காளியான வைத்திய நிபுணர் சத்தியமூர்த்தி இறுதி யுத்தம் முடிவடைந்த நிலையில் தடுப்புக் காவ 15

## இணுவிலில் இளைஞன் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)
சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இணுவில் பகுதியில் இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.
செட்டி வீதி, இணுவில் மேற்குப் பகுதியைச் சேர்ந்த 31 15

கடந்த ஆட்சியில் குற்றமிழைத்தவர்கள்

# எவராக இருந்தாலும் தப்பிக்கவே முடியாது

அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார



(கொழும்பு)
கடந்த ஆட்சியில் குற்றமிழைத்தவர்கள் எவராக இருந்தாலும் சட்டநடவடிக்கையில் இருந்து தப்பிக்க முடியாது என அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.
(02ஆம் பக்கம் பார்க்க)



## யாழில் இதுவரை 110 பேருக்கு எலிக்காய்ச்சல்

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்டத்தில் எலிக் காய்ச்சல் காரணமாக 15

## பயங்கரவாத குற்றத்தடுப்பு விசாரணைக்கு அழைப்பு

போலிக்கடிதம் தயாரித்த இருவர் முல்லைத்தீவில் கைது

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவில் இருந்து கொண்டு வெளிநாட்டில் அகதிகள் தஞ்சம் கோரிய மூவருக்கு போலியான பயங்கரவாத குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவு விசாரணைக்கு அழைத்தது போல் கடிதம் அச்சிட்டு அனுப்பி வைத்த நபர்கள் இருவரை முல்லைத்தீவு 15

## ஜனாதிபதி அநுர அடுத்த மாதம் சீனா விஜயம்

(கொழும்பு)
இந்தியாவுக்கான விஜயத்தினை அடுத்து, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அடுத்த மாதம் சீனாவுக்குச் செல்லவுள்ளார் என்று வெளி 15

## அர்ச்சுனா எம்.பியால் பாராளுமன்றில் குழப்பம்

எச்சரித்த சபாநாயகர்

(கொழும்பு)
யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா நேற்றைய பாராளுமன்ற அமர்வின்போது குழப்பம் விளைவிக்கும் வகையில் செயற்பட்டுள்ளார்.
பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கான நேரம் 02

## தேர்தலில் வழங்கிய வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றியே தீருவோம்

அமைச்சர் பிமல் ரத்நாயக்க



(கொழும்பு)
"தேர்தலின்போது நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக் குறுதிகளை நிறைவேற்றியே தீருவோம். மக்களின் ஆணையை ஒருபோதும் உதாசீனம் செய்யமாட்டோம்" என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.
இது தொடர்பில் 02

சட்டவிரோத மணல் அகழ்வு

## டிப்பரை 40 கிலோ மீற்றர் துரத்தி மடக்கிய பருத்தித்துறைப் பொலிஸார்

(யாழ்ப்பாணம்)
பருத்தித்துறை வல்லிபுரம் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற கனரக டிப்பர் வாகனத்தை பருத்தித்துறைப் பொலிஸார் 40 கிலோ மீற்றர் துரத்திச்சென்று 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சீனாவின் ஒத்துழைப்பை தொடர்ந்து எதிர்பார்க்கிறோம்

## சீனப்பிரதிநிதியிடம் ஜனாதிபதி



கடன்மறுசீரமைப்பு வேலைத் திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கியமை மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இலங்கைக்குக் கடன் பெற்றுக்கொடுத்தமைக்காக சீன அரசாங்கத்துக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நன்றி தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் சீன மக்கள் குடியரசின் அரசியல் ஆலோசனை சம்மேளன தேசியக் குழுவின் உப தலைவர் கின் பொயோங் ஆகியோருக்கு இடையில் பாராளுமன்றக்கட்டிடத்தொகுதியில் நேற்று சந்திப்பொன்று நடைபெற்றது.

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் காணப்படும் நீண்டகால உறவுகளை மேலும் வலுப்படுத்தி, புதிய அரசாங்கத்துடன் தொடர்ந்தும் செயற்பட எதிர்பார்த்திருப்பதாக கின் பொயோங் இதன் போது தெரிவித்தார்.

அதேபோல் நாட்டின் அனர்த்த நிலைமைகளின் போது உதவிகளை வழங்கியமை மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு சீருடைகளை வழங்கியமைக்காகவும் நன்றி கூறிய ஜனாதிபதி சீன அரசாங்கத்தின் ஒத்துழைப்பைத் தொடர்ந்தும் எதிர்பார்ப்பதாகவும் கூறினார். (ம-7)

## அர்ச்சுனா...

ஒதுக்கப்பட்டபோது, யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகத்தின் மீதும், வைத்தியசாலையின் பணிப்பாளர் சத்தியமூர்த்தி மீதும் கடுமையான குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார். அத்துடன், முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோரையும் கடுமையாக தாக்கி பேசியிருந்தார்.

மேலும், யாழ். போதனா வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் பல இன்னல்களை சந்திப்பதாகவும், பல முறைப்பாடுகளை தன்னிடம் வழங்கி தீர்வு பெற்றுத் தருமாறு கோரியதாகவும் எனவே இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா குறிப்பிட்டிருந்தார்.

இடையில் குறுக்கிட்ட சபாநாயகர், அர்ச்சுனாவைப் பார்த்து சபையில் உரையாற்றுவதாக சமர்ப்பித்த யோசனைகள் குறித்து மாத்திரம் உரையாற்றுமாறும் பல முறை எச்சரிக்கை விடுத்தார்.

எனினும், இதனைக் கருத்திற் கொள்ளாத பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா, தனக்கு பாதுகாப்பு இல்லை எனவும், தன்மீது 19 வழக்குகள் உள்ளதாகவும், எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் தான் அச்சுறுத்தப்பட்டதாகவும், தன்னுடைய பாதுகாப்புத் தொடர்பில் ஜனாதிபதி உள்ளிட்டோர் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் அடுக்கடுக்காக குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார்.

இதன்போது சபாநாயகரால் பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவுக்கு மீண்டும் எச்சரிக்கை வழங்கப்பட்டது. (ம-7)

## எவராக இரு...

ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த ஆட்சியில் நடந்தேறிய ஊழல், மோசடிகள் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளால்தான் நாடு அதலபாதாளத்துக்குச் சென்றது. கடந்த ஆட்சியாளர்கள் நாட்டைச் சீரழித்து குடும்ப ஆட்சியை முன்னெடுத்தபடியால்தான் மக்கள் அணிதிரண்டு,அந்த ஆட்சியாளர்களை விரட்டியடித்தார்கள். தற்போதைய ஆட்சி மூன்றிலிரண்டுபெரும்பான்மையுடன் மக்களால் நிறுவப்பட்ட ஆட்சி. நீதியை எதிர்பார்த்துக் காத்திருக்கும் மக்களால் நிறுவப்பட்ட ஆட்சி.எனவே கடந்த ஆட்சியில் குற்றமிழைத்தவர்கள் எவராக இருந்தாலும் தப்பவே முடியாது என்றார். (ம-7)

## தேர்தலில்...

ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது,

ஜனாதிபதித் தேர்தலின் போதும், பாராளுமன்றத் தேர்தலின்போதும் நாம் வழங்கிய வாக்குறுதிகளைக் கட்டாயம் நிறைவேற்றுவோம்.

இரண்டு தேர்தல்களிலும் தேசிய மக்கள் சக்திக்கு மக்களின் அமோக ஆணை கிடைத்துள்ளது. மாற்றத்தை விரும்பிய மக்கள், எம்மை நம்பி வாக்களித்துள்ளார்கள்.

நாம் முன்வைத்த கொள்கைத் திட்டங்களை ஏற்றே எமக்கு அவர்கள் வாக்களித்துள்ளார்கள். எனவே, மக்களின் ஆணையை ஒருபோதும் உதாசீனம் செய்யமாட்டோம். எதிரணியினர் எம் மீது சேறுபூசும் நடவடிக்கைகளில் ஈடுபட முயற்சிக்கலாம். ஆனால், நாம் உண்மையாக, நேர்மையாகச் செயற்படுவதால் எதற்கும்அஞ்சமாட்டோம் என்றார். (ம-7)

## டிப்பரை 40கி...

துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு கைப்பற்றியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வல்லிபுரம் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக மணலை ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனத்தை பருத்தித்துறைபொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமை பொலிஸ் பரிசோதகர் பிரியந்த அமரசிங்க தலைமையிலான பொலிஸ் குழுவினர் நிறுத்துமாறு சைகை காட்டியுள்ளனர்.

அதனை மதிக்காது டிப்பர் வாகனம் நிறுத்தாது வேகமாகச் சென்றுள்ளது.

இந்நிலையில் சுமார் நாற்பது கிலோமீற்றர் தூரம் குறித்த டிப்பரை கலைத்துச் சென்ற பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். மேலும் தப்பிக்க முடியாத நிலையில் டிப்பர் சாரதி டிப்பரை நிறுத்திவிட்டு தப்பிச்சென்றுள்ளார்.

இந்நிலையில் குறித்த டிப்பரை பருத்தித்துறை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (ம-7,60)

## எந்தவொரு...

தற்போது மீளப் பெறத்தயாரா? என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார கேள்வி எழுப்பினார்.

இந்தியாவுடன் மின்சக்தி கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கும், குழாய் தொடர்புகளைப் பேணுவதற்கும், கலாசார தொடர்பைப் பேணுவதற்கும், இந்திய ரூபாவினை இலங்கையில் பயன்படுத்துவதற்கும், நில மற்றும் கடல் வழித் தொடர்புகளைப் பேணுவதற்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

இந்தியாவுடன் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் பிணைப்புகளை ஏற்படுத்திக் கொண்டால், ஏனைய நாடுகளுடன் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுவது சிக்கலை ஏற்படுத்தும் என எதிர்க்கட்சியாக இருக்கும்போது தேசிய மக்கள் சக்தி கூறியது.

எனினும், தற்போது, இந்தியாவுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவித்த எட்கா உடன் படிக்கையைக் கைச்சாத்திட்டார். இந்த நிலையில், இந்தியா தொடர்பிலும், எட்கா தொடர்பிலும் முன்னதாகத் தெரிவித்த கருத்தைத் தேசிய மக்கள் சக்தி தற்போது மீளப் பெறுமா என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார கேள்வி எழுப்பினார்.

அதேநேரம், இதன்போது கருத்துரைத்த வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், உள்நாட்டில் மின்சக்தி உற்பத்தி செய்வதாகவும் மேலதிக மின்சக்தியை பிம்ஸ்டெக் அமைப்பின் பொருளாதார ஒத்துழைப்புடன் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதாகவும் நாம் முன்னதாக கூறியிருந்தோம். இதனூடாக, இலங்கைக்கு அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம். அதனை விடுத்து, நாட்டுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் எந்தவொரு உடன் படிக்கையையும் இந்தியாவுடன் கைச்சாத்திடவில்லை.

இந்தியப் பிரதமருடன் ஜனாதிபதி இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில் மின்சக்தி தொடர்பான பேச்சுவார்த்தைகள் முன்கொண்டு செல்லப்படும் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.எனவே, நாட்டைக் காட்டிக் கொடுக்கும் எந்தவொரு உடன்படிக்கையையும் கைச்சாத்திடவில்லை என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார். (ம-7)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. சதானந்தம் நித்தியானந்தராஜா

பண்டாரநாயக்கா சர்வதேச மாநாடு மண்டபத்தில் கொழும்புப் பல்கலைக்கழகத்தால் நடாத்தப்பட்ட பட்டமளிப்பு விழாவில் (06.12.2024) முதுகலைமாணி (M.Ed) பட்டம் பெற்ற எமது கல்லூரி ஆசிரியர் திரு. சதானந்தம் நித்தியானந்தராஜா அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
கல்லூரிச் சமூகம், ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பளை.

(C-1853)



கண்ணீர் அஞ்சலி

அமுதலிங்கம் நிவேதன்



செட்டி வீதி இணுவில் மேற்கு இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமுதலிங்கம் நிவேதன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

செட்டி வீதி, இணுவில் மேற்கு, இணுவில்.

முருகையா குடும்பம், இணுவில் முருகஜீவ அறக்கட்டளை யாழ்ப்பாணம், இலங்கை.

(C-1855)


Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

# மீண்டும் ஆட்சியமைப்போம்!
# ஜனாதிபதி பகிரங்க அறிவிப்பு



**(கொழும்பு)**

**எதிர்வரும் 2028ஆம் ஆண்டும் தமது அரசாங்கமே ஆட்சியை அமைக்கும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பகிரங்க அறிவிப்பொன்றை விடுத்துள்ளார்.**

நேற்று விசேட அறிக்கையொன்றைப் பாராளுமன்றிற்கு விடுத்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

2028ஆம் ஆண்டுக்குள் வெளிநாட்டு கையிருப்பை 15.1 பில்லியன் டொலர்களாக அதிகரிப்பதே அரசாங்கத்தின் நோக்கம்.

அத்துடன் 2022ஆம் ஆண்டு இடம்பெறும் நிலைமை மீண்டும் நாட்டில் ஏற்படாது எனவும் ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டார்.

இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நேற்று பாராளுமன்றிற்கு சமூகமளித்திருந்தார்.

பத்தாவது பாராளுமன்றத்தின் அமர்வுகள் நேற்று ஆரம்பமாகியுள்ள நிலையில் ஜனாதிபதி பாராளுமன்றிற்கு வருகைத் தந்திருந்தார். (நி)

# பெப்ரவரி முதல்
# தனியார் வாகனங்கள் இறக்குமதி

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி முதல் தனியார் பாவனைக்கான வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார்.

இதேவேளை 2028 ஆம் ஆண்டளவில் நாட்டின் வெளிநாட்டுக் கையிருப்பை 15.1 பில்லியன் டொலர்களாக அதிகரிப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் 2022 இல் இருந்த நிலைமைக்கு நாடு மீண்டும் செல்லாது எனவும் ஜனாதிபதி இதன்போது உறுதியளித்தார்.

மேலும் 2028 ஆம் ஆண்டு தமது அரசாங்கம் தான் அமையும் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.(நி-8)

## பாராளுமன்ற நிதிக்குழு தலைவராக ஹர்ஷ



(கொழும்பு)

இலங்கையின் 10 ஆவது பாராளுமன்றத்தின் பொது நிதி தொடர்பான பாராளுமன்ற குழு வின் தலைவராக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வாவின் நியமனம் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவினால் நேற்று பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

இதனைத் தவிர ஹர்ஷன சூரியப்பெரும, ரவி கருணா நாயக்க, ஹர்ஷன ராஜ கருணா, நிமல் பலிஹேன, விஜேசிறி பஸ்நாயக்க, திலின சமரகோன் மற்றும் லக்மாலி ஹேமச்சந்திர ஆகியோர் குழுவில் பணியாற்ற தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (நி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## ஆஸி.யின் வெற்றியை தட்டிப்பறித்த மழை

### சமநிலையான டெஸ்ட்



இந்தியா - அவுஸ்திரேலியா மோதிய 3 ஆவது டெஸ்ட் போட்டியின் 5 ஆவது நாள் மழையால் பாதிக்கப்பட்டதால் போட்டி சமநிலையில் முடிவடைந்துள்ளது.

ஆஸி அணி முதல் இன்னிங்ஸில் 445 இற்கு ஓல் அவுட்டானது. நான்காவது நாள் தொடக்கத்தில் ரோஹித் ஆட்டமிழக்க கே.எல். ராகுல் - ஜடேஜா சிறப்பாக விளையாடினர். ராகுல் 84 ரன்களுக்கும் ஜடேஜா 77 ரன்களுக்கும் ஆட்டமிழந்தார்கள்.

ஆட்டத்தின் பல்வேறுமுறை மழை குறுக்கிட்டதால் இந்திய அணிக்கு நல்வாய்ப்பாக அமைந்தது. இறுதியில் பும்ரா (10)- ஆகாஷ் தீப் (27) கூட்டணி அதிரடியாக விளையாடியதால் ஃபாலோ ஆன் தவிர்க்கப்பட்டது.

252/9 ரன்களுக்கு 4 ஆவது நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. அதன்பின்னர் நேற்று ஆட்டம் ஆரம்பமானதும் 4 ஓவர்களில் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

முதல் இன்னிங்ஸில் சதம் விளாசிய டிராவிஸ் ஹெட் ஆட்டநாயகனாக அறிவிக்கப்பட்டார்.

இந்தத் தொடர் 1-1 என்ற கணக்கில் சமனில் தொடர்கிறது. இவ்விரு அணிகளும் விளையாடும் 4 ஆவது டெஸ்ட் போட்டி வருகிற டிசம்பர் 26 ஆம் திகதி மெல்போர்னில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

## விடை கொடு மனமே...

### ஓய்வினை அறிவித்த அஷ்வின்

சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக இந்திய கிரிக்கெட் அணியின் சுழற்பந்து நட்சத்திரம் ரவிச்சந்திரன் அஷ்வின் நேற்று அறிவித்தார்.

பிரிஸ்பேனில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான பார்டர்-கவாஸ்கர் டெஸ்ட் தொடரின் மூன்றாவது போட்டியைத் தொடர்ந்து நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அஷ்வின் ஓய்வினை அறிவித்தார்.

38 வயதான அஷ்வின், ஒருநாள் கிரிக்கெட்டில் 156 விக்கெட்டுகளையும் டெஸ்ட் போட்டியில் 537 விக்கெட்டுகளையும் ரி-20 கிரிக்கெட்டில் 72 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளதுடன் துடுப்பாட்டத்தில் டெஸ்ட் போட்டிகளில் 6 சதங்களுடன் 3,503 ஓட்டங்களை பெற்றுள்ளார்.

ஒட்டுமொத்தமாக அனைத்து வடிவ சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலும் 700 விக்கெட்டுகளை குவித்த இந்திய சுழற்பந்து வீச்சாளர்களில் ஒருவராகவும் அஷ்வின் ஆவார்.

அதேநேரத்தில் டெஸ்ட் போட்டிகளில் இந்தியாவின் இரண்டாவது அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர் என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார். முதல் இடத்தில் 619 விக்கெட்டுகளுடன் அனில் கும்ப்ளே உள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)



## 27 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணி வெற்றி

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான 2 ஆவது ரி-20 போட்டியில் பங்களாதேஷ் அணி 27 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

செயின்ட் வின்சென்ட்டில் நடந்த இரண்டாவது ரி-20 போட்டியில் மேற்கிந்திய தீவுகள், பங்களாதேஷ் அணிகள் மோதின.



முதலில் ஆடிய பங்களாதேஷ் அணி தொடக்கத்தில் விக்கெட்டுகளை இழந்தது. எனினும் ஷமிம் ஹொசைன் 17 பந்துகளில் 2 சிக்ஸர், 2 பவுண்டரிகளுடன் 35 ஓட்டங்கள் விளாசினார்.

மெஹிதி ஹசன் 26 (25) ஓட்டங்களும், ஜாகிர் அலி 21 (20) ஓட்டங்களும் எடுத்தனர். இதன்மூலம் பங்களாதேஷ் 129 ஓட்டங்கள் எடுத்தது.

பின்னர் களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி தஸ்கின் அகமது, மஹெதி ஹசன் பந்துவீச்சில் அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுத்தது.

நிக்கோலஸ் பூரன் 5 ஓட்டங்களிலும், அணித் தலைவர் ரோவ்மன் பாவெல் 6 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

ரஸ்டன் சேஸ் 34 பந்துகளில் 32 ஓட்டங்களில் வெளியேற, அகேல் ஹுசைன் மட்டும் வெற்றிக்காக போராடினார்.

31 பந்துகளில் 2 சிக்ஸர்களுடன் 31 ஓட்டங்கள் எடுத்த நிலையில் அகேல் ஹுசைன் கடைசி விக்கெட்டாக அவுட் ஆக, மேற்கிந்திய தீவுகள் 102 ஓட்டங்களுக்கு சுருண்டது.

பங்களாதேஷ் அணியின் தரப்பில் தஸ்கின் அகமது 3 விக்கெட்டுகளும், மஹெதி ஹசன், தன்சிம் ஹஸன் மற்றும் ரிஷாத் ஹொசைன் தலா 2 விக்கெட்டுகளும் கைப்பற்றினர். (6)

## நியூசிலாந்து அணியின் கப்டனாக மிட்செல் சான்ட்னர்

நியூசிலாந்து ஒருநாள் கிரிக்கெட் அணிக்கு புதிய கப்டனாக மிட்செல் சான்ட்னெர் நியமிக்கப்பட்டுள்ளார்.

சமீபத்தில் இங்கிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடிய நியூசிலாந்து அணி 1-2 என்ற கணக்கில் தோல்வியை சந்தித்தது.

இதைத் தொடர்ந்து நியூசிலாந்து அணி இலங்கை அணிக்கு எதிராக மூன்று ரி-20 போட்டிகள் மற்றும் மூன்று ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாட இருக்கிறது.

இலங்கை அணிக்கு எதிரான ஒருநாள் மற்றும் ரி-20 தொடர் நியூசிலாந்து நாட்டிலேயே நடைபெறுகிறது.

இந்த நிலையில், நியூசிலாந்து ஒருநாள் கிரிக்கெட் அணிக்கு மிட்செல் சான்ட்னெரை நியமித்து நியூசிலாந்து கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது.

கடந்த ரி-20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் நியூசிலாந்து அணி தோல்வியைத் தழுவியது.

இதைத் தொடர்ந்து நியூசிலாந்து கப்டனாக இருந்த கேன் வில்லியம்சன் அந்த பொறுப்பில் இருந்து விலகினார்.

தற்போது கப்டனாக நியமிக்கப்பட்டுள்ள மிட்செல் சான்ட்னெர் நியூசிலாந்து அணிக்காக 30 டெஸ்ட், 107 ஒருநாள் மற்றும் 106 ரி-20 போட்டிகளில் விளையாடி உள்ளார். (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரவலத்தின் சாட்சியாக முள்ளிவாய்க்காலில் நினைவாலயம்

## ரவிகரன் எம்.பி கோரிக்கை



(கொழும்பு)

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் பேரவலத்தின் சாட்சியாக நினைவாலயம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமென வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரை ராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றில் நேற்று சர்வதேச இறையாண்மை பிணைமுறி மறுசீரமைப்பு தொடர்பான விவாதத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில், 2024 நவம்பர் 27 ஆம் திகதி எமது மக்கள் தங்களின் உறவுகளுக்கு எதுவித இடர்பாடுமின்றி, அமைதியாக தமது அஞ்சலிகளை செலுத்தி தமது உணர்வலைகளை வெளிப்படுத்தி ஆறுதலடைந்தனர்.

அந்தவகையில் ஜனாதிபதியின் இந்த நிலைப்பாட்டிற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இலங்கைத் தீவில் காலங் காலமாக தொடர் இனவழிப்பிற்கு உள்ளாக்கப்பட்டு வரும் தமிழர்கள், 2009 இல் இடம் பெற்ற இறுதிப் போரில் வார்த்தைகளில் அடக்க முடியாத துன்பத்தை அனுபவித்து இனவழிப்பிற்கு உள்ளாக்கப்பட்டனர்.

இறுதிப் போரின் வலிகள் இன்னும் ஆறாத நிலையில் அப்போரில் தமது உறவுகளை இழந்த ஏராளமான மக்கள் இன்னும் தம் உணர்வுகளுடன் நடைபிணங்களாக வாழ்ந்து வருகின்றனர்.

தம்மை யாராவது காப்பாற்ற மாட்டார்களா? என்ற ஏக்கத்தில் சின்னஞ்சிறியவர்கள் முதல், பெரியவர்கள் வரை ஏங்கித் தவித்த நிலை, "பசி, பசி" எனக் குழந்தைகள் அழும் போது செய்வதறியாத நிலையில் பெற்றோர்கள் கலங்கிய அவல நிலை.

பதுங்கு குழிகளை விட்டு வெளியேவந்தால் தப்பமுடியாது என்றெண்ணி பதுங்குகுழிகளுக்குள்ளேயே தங்கியிருந்த நேரம் அதற்குள்ளேயும் குண்டுகள் விழுந்து உறவுகள் மடிந்தபோது உயிரிழந்த தமது உறவுகளைப் புதைப்பதற்கு இயலாமல் உடலங்களை அவ்வாறே விட்டு ஓடிய நிலமைகள், ஆகியவற்றை எண்ணிப் பாருங்கள். இலட்சக்கணக்கில் தமிழ் உறவுகளைப் பலி கொண்ட அந்தப் பேரவலம், தமிழ்த்தேசிய இனத்தின் கூட்டு மன உள வியலில் மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

இந்தநிலையில் அங்கு உறவுகளை இழந்து, தற்போது வாழ்ந்து வருகின்ற மக்கள் தம் உறவுகளை நினைவுக் கூர்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஒரு நினைவிடம் தேவை என்பதை அங்குள்ள மக்கள் ஆதங்கத்துடன் கூறிவருகின்றனர்.

அந்தவகையில் தேசிய பேர வலத்தின் சாட்சியாக நினைவு ஆலயம் முள்ளிவாய்க்காலில் மே -18 நினைவு கூருமிடத்தில் அமைக்கப்பட வேண்டும்.

எனவே இனப் பாகுபாடு பாராது, நாம் முள்ளிவாய்க் காலில் ஓர் நினைவாலயம் அமைப்பதற்கு அனுமதி தாருங்கள் எனக் கேட்டுக் கொள்கின்றேன் என அவர் தெரிவித்தார். (நி)


# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

9 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு கார்கில்ஸ் வங்கி நடத்தும் இரத்ததான முகாம் நாளை வெள்ளிக் கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 12.30 மணிவரை யாழ். கார்கில்ஸ் வங்கியின் சதுக்கத்தில் இடம்பெறவுள்ளது.

எனவே குறித்த இரத்ததான முகாமில் தன்னார்வலர்களை கலந்து கொண்டு குருதித் தானம் வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-6-8)

## 31 ஆம் நாளில் நினைவு கூருகின்றோம்



**அமரர். அழகசுந்தரம் கிருபாகரன்**

(அதிபர்– கிருபா லேணர்ஸ்)

வன்சொல் வெளிவரா
இன் முகத் தோற்றம்
வாரி கொடையளித்த கரங்கள்
கம்பீர நடையளிக்கும் கால்கள்
பிறர் துயர் கேட்கும் செவிகள்
எதையும் எதிர்கொள்ளும் உறுதியுடன்
சிந்தனையை செயலாக்கி
சிறப்புடன் வாழ்ந்தீர்கள்- அண்ணா
வியந்து பார்க்க வைத்து
மறைந்து போனதேனோ?

(சி-1847)

லதா அக்கா குடும்பத்தினர்.

# இராசிபலன்

19.12. 2024
மார்கழி 04, வியாழக்கிழமை
சதுர்த்தி பிற்பகல் 1.06 மணிவரை
ஆயிலியம் பின்னிரவு 5.12 மணிவரை

சுபநேரம் -7.53-9.23 மணிவரை
இராகுகாலம் 1.53-3.23 மணிவரை
சித்தாமிர்தம்

சந்திராஷ்டமம்- மூலம்.

வளவன்

**மேஷம்** ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**ரிஷபம்** விடாமுயற்சிக்கு இன்று வெற்றி கிடைக்கும், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**மிதுனம்** வெளியூர்ப் பயணங்களால் ஆதாயமுண்டு, நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும், செய் தொழில் நன்மையுண்டு.

**கடகம்** இறை வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பயணங்களால் பலனுண்டு, கௌரவம் மிக்கவர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

**சிம்மம்** எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள்.

**கன்னி** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**துலாம்** செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், வீடு கட்டும் பணியில் ஆர்வம் கூடும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்.

**தனுசு** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம், உடல் நலனில் அதிக கவனம் தேவை, பிரயாண பயமுண்டு.

**மகரம்** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், மறக்க முடியாத சம்பவங்கள் இடம் பெறலாம்.

**கும்பம்** குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், கூட்டுத் தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**மீனம்** சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பாராட்டும் புகழும் கூடும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், போசன சுகமுண்டு.

மதங்கள் பல இருந்தாலும் ஒழுக்கம் ஒன்று தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசுக்கட்சி ஆரம்பமாகி 75 ஆண்டுகள் பூர்த்தி

## தந்தை செல்வா சதுக்கத்தில் அனுஸ்டிப்பு



(யாழ்ப்பாணம்)

இலங்கை தமிழரசுக்கட்சி ஆரம்பிக்கப்பட்டு 75 ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு யாழில் தந்தை செல்வா நினைவுச் சதுக்கத்தில் அமைந்துள்ள தந்தை செல்வா சிலைக்கு இலங்கை தமிழரசு கட்சியின் முக்கியஸ்தர்களால் மலர் மாலை அணிவித்தும் மலர் தூவியும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந் நிகழ்வில் இலங்கை தமிழரசுக்கட்சியின் முக்கியஸ்தர்களான மாவை சேனாதிராஜா, சி.வி.கே. சிவஞானம், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ சுமந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு தந்தை செல்வாவின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

இலங்கை தமிழரசுக் கட்சி 1949 ஆம் ஆண்டு டிசம்பர் 18 ஆம் திகதி கொழும்பு மருதானை எழுதுவினைஞர் சங்க மண்டபத்தில் வைத்து தந்தை செல்வாவின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-33)

# மதுபான உற்பத்தி நிலையம் பொலிஸாரினால் முற்றுகை

## ஒருவர் கைது; 60 லீற்றர் கோடா மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் சட்டவிரோத மதுபான உற்பத்தி நிலையம் பொலிஸாரினால் முற்றுகையிடப்பட்டு 60 லீற்றர் கோடாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அரியாலை பகுதியில் சட்டவிரோத மதுபான உற்பத்தி நிலையம் ஒன்று இயங்கி வருவதாக மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் அவ்விடத்தை சுற்றி வளைத்தனர்.

அவ்விடத்தில் இருந்து சட்டவிரோத மதுபான உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்ட காஸ் அடுப்பு, சிலிண்டர், 60 லீற்றர் கோடா என்பவற்றை மீட்டதுடன் உற்பத்தியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் அங்கிருந்த நபரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரையும் மீட்கப்பட்ட பொருட்களையும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக யாழ். பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்நிலையில் பொலிஸார் சந்தேகநபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (6-33)

# யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரி கற்கை நெறிகளுக்கான தேர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியில் 2025 ஆம் ஆண்டிற்கான சான்றிதழ் தர (NVQ 3 & 4) மற்றும் டிப்ளோமா தர (NVQ 5& 6) கற்கைநெறிகள் யாவும் ஜனவரி மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில் கற்கைநெறிகளுக்கான நேர்முக் தேர்வுகள் எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளது.

மின் இலத்திரனியில், கட்டட நிர்மாணம், மோட்டார் வாகன தொழில்நுட்பம், கணக்கீடு, மொழித்துறை மற்றும் பொதுத்துறை சார்ந்த 5 இற்கும் மேலான கற்கைகளில் தரம் 10 தகைமை முதல் க.பொ.த உயர் தர தகைமை உடையோர் வரை தகைமைக்கு ஏற்ப கற்கைநெறிகளை தெரிவு செய்து கற்க முடியும்.

கற்கைநெறிகளை பயில விரும்பும் மாணவர்கள் துரிதமாக விண்ணப்பித்து இணைந்து கொள்ளலாம். மேலதிக விபரங்களுக்கு தொழில்நுட்பவியல் கல்லூரியின் தொழில் வழிகாட்டல் நிலையத்துடன் நேரடியாகவோ 021 222 2403 என்னும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாகவோ தொடர்பு கொள்ளலாம்.

அல்லது www.dtet.gov.lk என்னும் இணையத்தின் ஊடாகவும் பெற்றுக் கொள்ள முடியும் என யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரியின் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (6-8)

# விபத்துக்குள்ளான சொகுசு பேருந்து முற்றாக சேதமடைந்த உழவியந்திரம்

## ❖ மிருசுவிலில் சம்பவம்
## ❖ 2 பேர் படுகாயம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிருசுவில் பகுதியில் நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த சொகுசு பேருந்து, அதே திசையில் கொடிகாமம் நோக்கிப் பயணித்த இருசக்கர உழவியந்திரத்துடன் மோதி மேற்படி விபத்துச் சம்பவித்துள்ளது.

இதில் இருசக்கர உழவியந்திரத்தில் பயணித்த இருவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.





விபத்தில் இருசக்கர உழவியந்திரம் முற்றாக சேதமடைந்திருப்பதுடன்-சொகுசு பேருந்தின் முன்பக்கமும் சேதமடைந்துள்ளது.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (6-830)

# சாவ. மருத்துவமனையில் தேவைப்பாடுகள் தொடர்பில் ஆளுநருடன் கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் தேவைப்பாடுகள் மற்றும் மேம்பாடுகள் தொடர்பில் மருத்துவமனையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தினருக்கும் வடக்கு மாகாண ஆளுநருக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.



இந்தச் சந்திப்பில் பிரதம செயலாளர் இ.இளங்கோவன், சுகாதார அமைச்சின் மூத்த உதவிச் செயலர் திருமதி அ.சாந்தசீலன், சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் பத்திரண, யாழ்.போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி, யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் பதில் பொறுப்பு மருத்துவ அதிகாரி கோ.ரஜீவ் ஆகியோருடன், நலன்புரிச் சங்கத்தின் பிரதிநிதிகளும் பங்கேற்றனர். (6-33)

# கல்வி நிறுவன வாயில்களில் நெரிசல்களை தவிர்க்க வேண்டும்

## நிர்வாகிகளுக்கு மாவட்ட செயலர் அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழில் தனியார் கல்வி நிறுவனங்களின் வாசல்களில் பெற்றோர்கள் காத்திருப்பதனால் பாரிய போக்குவரத்து நெருக்கடி ஏற்படுவதால் அதற்கு தீர்வு காணப்பட வேண்டும் என தனியார் கல்வி நிறுவன நிர்வாகிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யாழில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பாக மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே யாழ்.மாவட்டச் செயலர் ம.பிரதீபன் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் தனியார் கல்வி நிறுவனங்களில் வாசல்களில் பெற்றோர்கள் காத்திருப்பதனால் பாரிய போக்குவரத்து நெருக்கடி ஏற்படுகிறது.

ஆகவே தனியார் கல்வி நிலைய உரிமையாளர்கள் / நிர்வாகிகள் இதற்கான சரியான பொறிமுறையினை மேற்கொண்டு போக்குவரத்து நெரிசலினை கட்டுப்படுத்த வேண்டும்.

இந்தப் பொறிமுறையினை தாமாக நடைமுறைப்படுத்த தவறும் தனியார் கல்வி நிறுவனங்கள் தொடர்பில் பொலிஸாரின் உதவி பெற்றுக் கொள்ளப்படும்.

பிரதேச செயலாளர்கள் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாத இறுதிக்குள் தமது பிரதேசங்களில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் குழு வகுப்புக்கள் தொடர்பில் அனைவருடனும் கலந்துரையாடலை மேற்கொள்ள வேண்டும் எனவும் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலில் பிரதேச செயலாளர்கள், உதவி மாவட்ட செயலாளர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், யாழ் மாவட்ட தனியார் கல்வி நிலைய உரிமையாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (6-33)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் -03, மணல்தறை ஒழுங்கை **44/7C pt** எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம் என ஆதனவரிப் பதிவேட்டில் காணப்படுகின்றது.

இவ்வாதனத்தை யாழ்ப்பாணம் இல 6, முருகன் திருநெல்வேலி கிழக்கை சேர்ந்த தம்பர் வேலுப்பிள்ளை சிவலிங்கம் என்பவர் பிரசித்த நொத்தாரிசு K.M. இராதாகிருஸ்ணன் முகதாவில் 2011.09.10 ஆம் திகதி 719 ஆம் இலக்கத்தில் உருத்து விளம்பல் நிறைவேற்றியுள்ளார்.

குறித்த ஆதனத்தினை யாழ்ப்பாணம் திருநெல்வேலி கிழக்கு இல 6, முருகன் வீதியை சேர்ந்தவர்களான தம்பர் வேலுப்பிள்ளை சிவலிங்கமும் பெண் மகேஸ்வரியும் 10.09.2011 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு K.M. இராதாகிருஸ்ணன் முகதாவில் 720 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் அவ்வூர் தமது மகள் சிவலிங்கம் மகள் நளினி என்பவருக்கு இதன் பின்வரும் ஆதன அட்டவணை 1 இல் விபரிக்கப்படும் ஆதனத்தையும் 10.09.2011 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு K.M.இராதாகிருஸ்ணன் முகதாவில் 721 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் அவ்வூர் தமது மகள் சிவலிங்கம் மகள் லோகவதனி என்பவருக்கு இதன் பின்வரும் ஆதன அட்டவணை 2 இல் விபரிக்கப்படும் ஆதனத்தையும் நன்கொடை வழங்கியுள்ளனர்.

இல 61-3/1, ஸ்கைலைன் வீட்டுத்திட்டம், 37 ஆம் ஒழுங்கை, கொழும்பு 06 நளினி மதுசூதனன் விவாகத்திற்கு முன் சிவலிங்கம் மகள் நளினி இதன் பின்வரும் ஆதன அட்டவணை 1 இல் விபரிக்கப்படும் ஆதனத்தை 26.07.2023 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு நளினி கணேசயோகன் முகதாவில் 5669 ஆம் இலக்கத்தில் காணி அளவு தொடர்பில் விளம்பல் உறுதி நிறைவேற்றியுள்ளார். மேலும் குறித்த விளம்பல் உறுதியில் யாழ் மாநகர சபை என்பதற்கு பதிலாக நல்லூர் பிரதேச சபை என குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த தவறானது பிரசித்த நொத்தாரிசு திருமதி சறோஜினிதேவி இளங்கோவன் முகதாவில் தனது அற்றோனிதத்துவகாரர் துரைராஜசிங்கம் நாகேந்திரன் ஊடாக 28.08.2024 ஆம் திகதியிட்டு 20028 ஆம் இலக்கமிடப்பட்ட உறுதி மூலம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

இல 33-2/1 சமர் எம்பயர்,பிரெட்ரிகா வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06 லோகவதனி ஜங்கரேசன் விவாகத்திற்கு முன் சிவலிங்கம் மகள் லோகவதனி இதன் பின்வரும் ஆதன அட்டவணை 2 இல் விபரிக்கப்படும் ஆதனத்தை 26.07.2023 ஆம் திககியிட்டு பிரசித்த நொத்தாரிசு நளினி கணேசயோகன் முகதாவில் 5670 ஆம் இலக்க விளம்பல் உறுதி நிறைவேற்றியுள்ளார். மேலும் குறித்த விளம்பல் உறுதியில் யாழ்.மாநகர சபை என்பதற்கு பதிலாக நல்லூர் பிரதேச சபை என குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த தவறானது பிரசித்த நொத்தாரிசு திருமதி சறோஜினிதேவி இளங்கோவன் முகதாவில் தனது அற்றோனிதத்துவகாரர் துரைராஜசிங்கம் நாகேந்திரன் ஊடாக 28.08.2024 ஆம் திகதியிட்டு 20029 ஆம் இலக்கமிடப்பட்ட உறுதி மூலம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

### ஆதன அட்டவணை 01

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, நல்லூர் கோயிற்பற்று, நல்லூர் பிரதேச செயலகம், யாழ்ப்பாணம் மாநகரசபை, கிராம அலுவலர் பிரிவு J/103 கந்தர்மடம், வடகிழக்கு, திருநெல்வேலி இறை

"இரட்டைப்பிராயடி" இதன் விஸ்தீரணம் நிலப்பரப்பு ஏழும் (நில. பர 7) கிணறும் வான்பயிர் செய்பயிர்களும் இதில் மேற்குப்பக்கமாக நிலப்பரப்பு மூன்றரையும் (நில. பர 3 ½) கிணறும் வான்பயிர் செய்பயிர்களும் இதற்கெல்லை கிழக்கு: சிவலிங்கம் மகள் லோகவதனியின் ஆதனம், மேற்கு: வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியத்தின் உரிமைக்காரரரின் ஆதனம், வடக்கு: சிவசுப்பிரமணியம் கைம்பெண் பூமணியின் ஆதனம் தெற்கு: மணற்தறை ஒழுங்கையும் இதடங்கலும், குறித்த இவ் ஆதனம் தற்காலம் உத்தரவுபெற்ற நில அளவையாளர் K.பரமேஸ்வரன் அவர்களால் 1793/2014 ஆம் இலக்க 2014.05.23 ஆம் திகதி வரைபடத்தின் பிரகாரம் துண்டு 1 என விவரிக்கப்பட்டுள்ளது.

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, நல்லூர் கோயிற்பற்று, நல்லூர் பிரதேச செயலகம், யாழ்ப்பாணம் மாநகரசபை, கிராம அலுவலர் பிரிவு J/103 கந்தர்மடம்,வடகிழக்கு, திருநெல்வேலி இறை "இரட்டைப் பிராயடி" இதன் விஸ்தீரணம் இரண்டு நிலப்பரப்பு பதின்மூன்று தசம் ஆறு நான்கு குளி (நில பர 2 குளி 13.64) கிணறும் வான்பயிர் செய்பயிர்களும். இதற்கெல்லை

கிழக்கு: குறித்த 1793/2014 இலக்கப்படத்தில் காட்டப்பட்ட துண்டு 2 தற்காலம் லோகவதனி ஜங்கரேசன் விவாகத்திற்கு முன் சிவலிங்கம் மகள் லோகவதனி ஆதனம்.
மேற்கு: பாலசுந்தரம் கமல்காந்தும் பெண் ஜெனித்தாவின் ஆதனம்.
வடக்கு: 12 அடி அகலப்பாதை.
தெற்கு: மணற்தறை ஒழுங்கையிலிருந்து புதிய சிவன் வீதிக்கான ஒழுங்கை.

### ஆதன அட்டவணை 02

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, நல்லூர்க் கோயிற்பற்று, நல்லூர் பிரதேச செயலகம், யாழ்ப்பாணம் மாநகரசபை, கிராம அலுவலர் பிரிவு J/103 கந்தர்மடம், வடகிழக்கு, திருநெல்வேலி இறை

"இரட்டைப்பிராயடி" இதன் விஸ்தீரணம் நிலப்பரப்பு ஏழும் (நில பர 7) வான்பயிர் செய்பயிர்களும் இதில் மேற்குப்பக்கமாக ஏற்கனவே நன்கொடையாகக் கொடுக்கப்பட்ட நிலப்பரப்பு மூன்றரை (நில. பர 3 /½) நீக்கி மிகுதியில் கிழக்குப் பக்கமாக நிலப்பரப்பு மூன்றரையும் (நில. பர 3 /½) வான்பயிர் செய்பயிர்களும் இதற்கெல்லை கிழக்கு: சேனத்துரை தவமலரின் உரிமைக்காரரின் ஆதனம், மேற்கு : சிவலிங்கம் மகள் நளினியின் ஆதனம், வடக்கு: சிவசுப்பிரமணியம் பெண் பூமணியின் ஆதனம், தெற்கு: மணற்தறை ஒழுங்கையும் இதடங்கலும், குறித்த இவ் ஆதனம் தற்காலம் உத்தரவுபெற்ற நில அளவையாளர் K.பரமேஸ்வரன் அவர்களால் 1793/2014 ஆம் இலக்க 2014.05.23 ஆம் திகதி வரைபடத்தின் பிரகாரம் துண்டு 2 என விவரிக்கப்பட்டுள்ளது.

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, நல்லூர்க் கோயிற்பற்று, நல்லூர் பிரதேச செயலகம், யாழ்ப்பாணம் மாநகரசபை, கிராம அலுவலர் பிரிவு J/103 கந்தர்மடம் வடகிழக்கு, திருநெல்வேலி இறை

"இரட்டைப்பிராயடி" இதன் விஸ்தீரணம் இரண்டு பரப்பு பதின்மூன்று தசம் ஆறு நான்கு குளி (நில பர 2 குளி 13.64) கிணறும் வான்பயிர் செய்பயிர்களும் இதற்கெல்லை.

கிழக்கு: றொனால்ட் பெண் தனுசாவின் ஆதனம்
மேற்கு : குறித்த 1793/2014 இலக்கப்படத்தில் காட்டப்பட்ட துண்டு 1 தற்காலம் நளினி மதுசூதனன்விவாகத்திற்கு முன் சிவலிங்கம் மகள் நளினியின் ஆதனம்
வடக்கு: 12 அடி அகலப்பாதையும் குறித்த 1759/2014 இலக்கப்படத்தில் காட்டப்பட்ட துண்டு 3 சிவசுப்பிரமணியம் வகீதரனின் ஆதனம்
தெற்கு: மணற்தறை ஒழுங்கையிலிருந்து புதிய சிவன் வீதிக்கான ஒழுங்கை

தற்போது 44/7C ஆதனமானது உபபிரிவிடல் செய்யப்பட்டு **44/7E, 44/7G** என இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளது. தற்போது 44/7E என இலக்கமிடப்பட்ட ஆதனத்தினை நளினி மதுசூதனன் விவாகத்திற்கு முன் சிவலிங்கம் மகள் நளினி என்பவரும் 44/7G என இலக்கமிடப்பட்ட ஆதனத்தினை லோகவதனி ஜங்கரேசன் விவாகத்திற்கு முன் சிவலிங்கம் மகள் லோகவதனி என்பவரும் தமது பெயருக்கு எமது ஆதனவரிப் பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த 44/7E ஆம் இலக்க ஆதனத்தினை நளினி மதுசூதனன் விவாகத்திற்கு முன் சிவலிங்கம் மகள் நளினி என்பவருக்கும் **44/7G** ஆம் இலக்க ஆதனத்தினை லோகவதனி ஜங்கரேசன் விவாகத்திற்கு முன் சிவலிங்கம் மகள் லோகவதனி என்பவர்கள் பெயருக்கும் பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்.மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**
(C-1845) **19.12.2024**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருமான வரியில் திருத்தம் ஐ.எம்.எப் உடன்பாடு

## ஜனாதிபதி அறிவிப்பு



(கொழும்பு)

தொழில் செய்யும்போது ஒருவர் ஒரு இலட்சம் ரூபாவுக்கு செலுத்த வேண்டிய வருமான வரி மட்டத்தை ஒன்றரை இலட்சம் ரூபாய் வரை அதிகரிக்க சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், 6 சதவீத வரிக்கு உட்படும் வகையில் தனி நபர் வருமான வரியின் முதலாவது பிரிவை 500,000 ரூபாவிலிருந்து 10 இலட்சம் ரூபாய் வரை திருத்தியமைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அதற்கமைய, மாதம் 150,000 ரூபா சம்பளம் பெறுபவர் 100 வீத வரி விலக்கும் 200,000 சம்பாதிக்கும் நபருக்கு 71 வீத வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

அதன்படி, மாதாந்தம் 250,000 ரூபா வருமானம் பெறும் ஒருவரின் வரி 61 சதவீதத்தால் விடுவிக்கப்படும்.

300,000 வருமானம் பெறும் ஒருவரின் வரி 47 சதவீதத்தாலும் 350,000 வருமானம் பெறும் ஒருவரின் வரி 25.5 சதவீதத்தால் விடுவிக்கப்படும்.

மேலும் வெளிநாட்டு கையிருப்பை 15.1 பில்லியன் டொலர்களாக அதிகரிப்பதே அரசாங்கத்தின் நோக்கம் என்றும் குறிப்பிட்டுள்ளார். (நி)

# நிவாரண விலையில் தேங்காய்-சமித வித்தியாரத்ன

(கொழும்பு)

அரச காணிகளில் விளையும் தேங்காய்களை சதொச ஊடாக நிவாரண விலையில் மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் சமித வித்யாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் புதன்கிழமை (18) ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

10,000 ஏக்கருக்கும் மேற்பட்ட தென்னந் தோட்டங்களுக்கு சுமார் 5 ஆண்டுகளுக்கு மேல் உரம் வழங்கப்படவில்லை. இதன் காரணமாகவே விளைச்சல் குறைவடைந்துள்ளது.

55,000 மெற்றிக் தொன் உரம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. அந்த தொகையில் 25,000 மெற்றிக் தொன் உரத்தை தேங்காய் விளைச்சலுக்காக வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

5 ஏக்கருக்கும் குறைவான தேங்காய் விளைச்சல் நிலங்களைக் கொண்டவர்களுக்கு அடுத்த வாரம் முதல் உரத்தை பகிர்ந்தளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.


அது மாத்திரமின்றி தெங்கு உற்பத்தி ஊக்குவிப்பு வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரிசியில் வண்டுகள் இருப்பதாகக் கூறப்படுகின்றமை தொடர்பில் ஆராயுமாறு பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதோடு, விலைகள் தொடர்பில் கண்காணிக்குமாறு நுகர்வோர் அபிவிருத்தி அதிகார சபைக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அரிசியின் தரத்தைப் பாதுகாப்பதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றார். (நி)



# பாரதம்

## டுபாயில் விநோத சாகசம் வைரலாகும் வீடியோ



(டுபாய்)

டுபாய் நகரம் செல்வ செழிப்புமிக்கது. இந்த நாட்டின் ஆடம்பரம் வளர்ந்த நாடுகளையே திரும்பிப் பார்க்க வைக்கிறது. உலகின் உயரமான கட்டடமான புர்ஜ் கலீபா இதற்கு சான்று. அங்கு வசிக்கும் டுபாய் "ஷேக்" குகளின் பகட்டான வாழ்வும் மற்றவர்களை வாயைப் பிளக்கவே செய்யும்.

தற்போது டுபாயில் எடுக்கப்பட்ட வீடியோ ஒன்று இணையத்தில் வெளியாகி வைரலாகி வருகிறது. அதில் வெள்ளை நிற அங்கி மற்றும் தலைப்பாகை என பாரம்பரிய உடையணிந்த 2 ஆண்கள் சாலையோர டீக்கடையில் உட்கார்ந்தபடி டீ குடிக்கிறார்கள்.

அப்போது சொகுசு கார் ஒன்று ஒருபக்கமாக சாய்ந்தபடி அவர்கள் அருகே ஓடி சாகசத்தில் ஈடுபட்டு செல்கிறது. அப்போது அதே காரில் மறுபக்கமாக இருந்த 2 பேர் தங்களுடைய உடலை வெளியே நீட்டி டீ கோப்பைகளை உயர்த்தி காட்டியவாறு செல்கிறார்கள்.

இதுதொடர்பான வீடியோ சமூக வலைத்தளத்தில் வெளியாகி 7 1/2 கோடிக்கும் அதிகமான பார்வைகளையும் 20 லட்சம் "லைக்" குகளையும் குவித்துக் காட்டுத் தீ போல பரவி வருகிறது. (நி)

## ட்ரம்பின் அச்சுறுத்தலால் எல்லை விதிகளை கடுமையாக்கும் கனடா



(ஒட்டாவா)

எல்லைப் பாதுகாப்பிற்காக கனடா அரசாங்கம் நேற்று முன்தினம் திங்களன்று 1.3 பில்லியன் கனேடிய டொலர்களை முன்மொழிந்தது.

அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்காவிற்குள் குடியேறுபவர்கள், போதைப் பொருட்களின் நடமாட்டத்தை கனடா குறைக்காத பட்சத்தில் வரி விதிக்கப்படும் என அச்சுறுத்தியதை அடுத்து இந்த அறிவிப்பு வந்துள்ளது.

முன்னதாக ட்ரம்ப் கனடா மற்றும் மெக்சிகோவில் இருந்து அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் அனைத்து பொருட்களுக்கும் 25% வரி விதிக்கப்படும் என அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

இத்தகைய கட்டணங்கள் கனடாவின் பொருளாதாரத்திற்கு அடியாக அமையும் என பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர்.

இந் நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமையன்று இந்தத் திட்டத்தின் விபரங்களை அறிவித்த கனடாவின் நிதி மற்றும் அரசுகளுக்கிடையேயான விவகாரங்களுக்கான அமைச்சர் டொமினிக் லெப்லாங்க் , மத்திய அரசாங்கம் எல்லைப் பாதுகாப்பு அதிகரிப்புக்கு $1.3 பில்லியன் நிதியை ஒதுக்கும்.

இந்த நடவடிக்கைகள் "சட்டவிரோத போதைப் பொருள் மற்றும் ஒழுங்கற்ற குடியேற்றத்திற்கு எதிராக நமது எல்லையைப் பாதுகாக்கும் எனத் தெரிவித்தார்.

கனேடிய மத்திய அரசு எல்லைப் பாதுகாப்பை அதிகரிப்பதற்கு ஐந்து தூண்கள் கொண்ட அணுகுமுறையை வகுத்துள்ளது.

அவற்றில் ஃபெண்டானில் வர்த்தகத்தின் இடையூறு, சட்ட அமுலாக்கத்திற்கான புதிய கருவிகள், அமெரிக்க சட்ட அமுலாக்கத்துடன் மேம்பட்ட ஒருங்கிணைப்பு, அதிகரித்த தகவல் பகிர்வு மற்றும் எல்லையில் போக்குவரத்தை கட்டுப்படுத்துதல் ஆகியவை [illegible] கியது. (நி)

## வனுவாடுவை புரட்டிப்

- 11 பேர் உயிரிழப்பு
- 200 பேர் படுகாயம்
- 116,000 பேர் பாதிப்பு
- கட்டடங்கள், வீடுகள் சேதம்
- உயிரிழப்பு உயரலாம் என அச்ச



(நியூசிலாந்து)

பசுபிக் பெருங்கடலின் தெற்கே ஓசியானியா

அமைந்துள்ள வனுவாடுவில் நேற்று முந்தினம்

கிழமை ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 14 பேர் உயிரி



உயிர் பிழைத்தவர்களைக் தேடும் முயற்சியில் பலர் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்றும் அஞ்சப்படுவதுடன்

## ஆற்றில் படகு கவிழ்ந்ததில் 25 பேர் உயிரிழப்பு

### கொங்கோ நாட்டில் சோகம்




(கின்ஷாசா)

கொங்கோ நாட்டில் ஆற்றில் படகு கவிழ்ந்த விபத்தில் குழந்தைகள் உட்பட 25 பேர் பலியான சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. ஆபிரிக்க நாடான கொங்கோவில் அமைந்துள்ளது இனாங்கோ நகரம். இங்குள்ள பெமி ஆற்றில் 100 இற்கும் மேற்பட்டோரை ஏற்றிக் கொண்டு படகு ஒன்று புறப்பட்டுச் சென்றது. சிறிது தூரம் சென்ற படகு அதிக பேர் பயணித்ததால் பாரம் தாங்காமல் தத்தளித்தது. ஒரு கட்டத்தில் எதிர்பாராத விதமாக அந்தப் படகு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ப் போட்ட நிலநடுக்கம்!




## ரியாப் பகுதியில் ினம் செவ்வாய்க் பிரிழந்துள்ளனர்.

காயங்களுக்குள்ளான 200 இற்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஒரே இரவில் வனுவாடுவில் ஏற்பட்ட 7.3 மெக்னிடியூட் அளவிலான சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் கட்டடங்கள் வீடுகள் இடிந்து வீழ்ந்தன.

நிலநடுக்கம் அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து மற்றும் நியூசிலாந்து தூதரகங்கள் உள்ளிட்ட கட்டடங்களும் சேதத்தை ஏற்படுத்தியதுடன் நாட்டின் மின்சாரம் மற்றும் மொபைல் சேவைகளையும் முடக்கியது.

தேடுதல் மற்றும் நிவாரணப் பணிகள் நடைபெற்று வரும் நிலையில் பொதுமக்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்துவதற்காக ஏழு நாள் அவசர கால நிலை பிரகடனப் படுத்தப்பட்டுள்ளதாக வனுவாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பதிவான உயிரிழப்புகளில் நான்கு பேர் தலைநகர் போர்ட் விலாவில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் இறந்ததாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஆறு பேர் நிலச்சரிவில் இருந்தும் நான்கு பேர் இடிந்து விழுந்த கட்டடத்தில் இருந்தும் உயிரிழந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலநடுக்கத்தின் மோசமான விளைவுகளால் சுமார் 116,000 பேர் பாதிக்கப்படுள்ளதாக மனிதாபிமான விவகாரங்களுக்கான ஐக்கிய நாடுகளின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

செவ்வாய்க்கிழமை 12:47 மணிக்கு (01:47 GMT) நிலநடுக்கம் ஏற்பட்டதுடன் சுனாமி எச்சரிக்கையும் விடப்பட்டது.

தென் பசுபிக் பகுதியில் சுமார் 80 தீவுகளின் தாழ்வான தீவுக்கூட்டமான வனுவாடு, பிஜிக்கு மேற்கேயும், வடக்கு அவுஸ்திரேலியாவிலிருந்து ஆயிரக்கணக்கான கிலோமீற்றர் கிழக்கேயும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்தக் கோர விபத்தில் குழந்தைகள் உட்பட 25 பேர் உயிரிழந்தனர்.

தகவலறிந்து சம்பவப் பகுதிக்கு வந்த மீட்புக்குழுவினர் ஆற்றில் தத்தளித்தவர்களைக் காப்பாற்றி கரைக்கு அனுப்பி வைத்தனர். தீவிர தேடுதல் வேட்டையில் 25 சடலங்களை கைப்பற்றினர்.

படகில் 100 இற்கும் மேற்பட்டோர் இருந்ததால் எத்தனை பேர் நீரில் மூழ்கினர் என்பது பற்றிய முழு விபரங்கள் தெரியவில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். படகில் பயணித்தவர்களில் ஏராளமானோர் மாயமாகி உள்ளதால், பலி எண்ணிக்கை மேலும் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஜூன் மாதம் இதே நாட்டில் ஆற்றில் படகு கவிழ்ந்ததில் 80 பேர் பலியானது குறிப்பிடத்தக்கது. (நி-8)

# புற்றுநோய்க்கான தடுப்பூசி அறிமுகப்படுத்தும் ரஷ்யா

(மொஸ்கோ)

2025 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து ரஷ்ய நோயாளிகளுக்கு இலவசமாக விநியோகிக்கப்படும் புற்றுநோய்க்கு எதிரான தடுப்பூசியை உருவாக்கியுள்ளதாக ரஷ்ய சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

மொஸ்கோவின் சுகாதார அமைச்சின் கதிரியக்க மருத்துவ ஆராய்ச்சி மையத்தின் பொதுப் பணிப்பாளர் அண்மையில் ரஷ்ய வானொலியில் இந்தத் தகவலை வெளியிட்டதாக அந்நாட்டு அரசுக்குச் சொந்தமான செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த தடுப்பூசியானது புற்றுநோயைத் தடுப்பதற்காக பொது மக்களுக்கு வழங்கப்படுவதற்குப் பதிலாக புற்றுநோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கப் பயன்படுத்தப்படும்.


மேற்கத்தேய நாடுகளில் உருவாக்கப்படும் புற்றுநோய்த் தடுப்பூசிகளைப் போலவே ஒவ்வொரு நோயாளிக்கும் தடுப்பூசி தனிப்பயனாக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் தடுப்பூசி எந்த வகையான புற்றுநோய்களுக்கு சிகிச்சையளிக்க பயன்படும், எவ்வளவு பயனுள்ளதாக இருக்கும் அது எவ்வாறு வழங்கப்படும் என்பது போன்ற விடயங்கள் இன்னும் தெளிவுபடுத்தப்படவில்லை.

ரஷ்யாவில் புற்றுநோய் விகிதங்கள் அதிகரித்து வருகின்றன. 2022 இல் மாத்திரம் 635,000 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கர்ப்பப்பை, வாய்ப் புற்றுநோயைத் தடுக்க உதவும் மனித பாப்பிலோமா வைரஸ்களுக்கு எதிரான தடுப்பூசிகள் போன்ற புற்றுநோயைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்ட தடுப்பூசிகள் சந்தையில் ஏற்கனவே உள்ளன.

அமெரிக்காவில் புளோரிடா பல்கலைக்கழகத்தில் உள்ள நரம்பியல் விஞ்ஞானிகள் மூளைப் புற்றுநோய்க்கான தனிப்பயனாக்கப்பட்ட எம்ஆர்என்ஏ தடுப்பூசியை பரிசோதித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (நி)



# புதிய நிதியமைச்சரை நியமித்த ட்ரூடோ



(ஒட்டாவா)

கனடாவின் நிதியமைச்சராக இருந்த கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட் திடீரென தனது பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்திருந்த நிலையில் புதிய நிதியமைச்சராக டொமினிக் லிபிளான்கை அந்நாட்டின் ஜனாதிபதி ஜஸ்டின் ட்ரூடோ நியமித்துள்ளார்.

கனடாவைச் சேர்ந்த ஒவ்வொருவரும் 250 கனடா டொலர்கள் காசோலை வழங்குவதற்கான கொள்கை தொடர்பாக பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கும் நிதியமைச்சர் கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட்வுக்கும் இடையே கடந்த காலங்களில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து கடந்த வாரம் கருத்து தெரிவித்த ஜஸ்டின் ட்ரூடோ 'தனது அரசில் உயர்நிலை பொருளாதார ஆலோசகராக கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட் இருப்பதில் தனக்கு விருப்பம் இல்லை' எனத் தெரிவித்திருந்தார்.

இதனால் கனடாவின் நிதியமைச்சரும், துணைப் பிரதமருமான கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட் வருடாந்திர அரசு நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்வதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னதாக, தனது பதவியை இராஜினாமா செய்தார்.


கிறிஸ்டியா ஃபிரீலேண்ட் பதவியை இராஜினாமா செய்தது ட்ரூடோ அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் வகையில் அமைந்தது. இதையடுத்து தனது நெருங்கிய வட்டாரத்தில் உள்ள டொமினிக் லிபிளான்க்கை புதிய நிதியமைச்சராக நியமித்து ஜனாதிபதி ட்ரூடோ அறிவித்துள்ளார்.

இந்த ஆண்டு ஐந்து அமைச்சரவை அமைச்சர்கள் தமது பதவியை இராஜினாமா செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதானி குழுமத்துடன்

## பணியாற்றுவதில் ஆட்சேபனை இல்லை



(டில்லி)

அதானி குழுமம் ஏனைய நாடுகளுடன் முன்னெடுக்கும் பரிவர்த்தனைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் அக்கறை செலுத்தவில்லை என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் எக்கோனமிக் டைம்ஸ் ஊடகத்துக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியில் ஜனாதிபதி இதனை குறிப்பிட்டுள்ளார்.

நாங்கள் அடிப்படையில் எங்கள் முதலீடுகள், எங்கள் வளர்ச்சி பற்றி அக்கறை கொண்டுள்ளோம்.

அதானி குழுமம் ஏனைய நாடுகளுடன் எவ்வாறு செயற்படுகிறார்கள் என்பதில் இலங்கை அக்கறை கொள்வதில்லை.

அதானி நிறுவனம் நாட்டில் எவ்வாறான பணிகளை முன்னெடுக்கிறது என்பது குறித்தே கவனம் செலுத்துவதாகவும் முயற்சிகளுக்கு ஏற்ற வகையில் பணியாற்றியிருந்தால், அதானி குழுமத்துடன் இணைந்து பணியாற்றுவதில் எந்த ஆட்சேபனையும் இல்லை என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்

இலங்கையில் முக்கியமான முதலீடுகளைக் கொண்டுள்ள அதானி குழுமத்துக்கு எதிராக அமெரிக்காவில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

எனினும் இலங்கை அரசாங்கம் அதே கோணத்தில் அந்த நிறுவனத்தை பார்க்காது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தின் அபிவிருத்தி திட்டத்தை முன்னெடுக்கும் அதானி குழுமம் எரிசக்தி துறையில் முதலீடுகளை மேற்கொள்ள எதிர்பார்க்கிறது.

எனினும் துரதிஷ்டவசமாக சுற்றுச்சூழல் அக்கறை கொண்டவர்களால் அதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள குறித்த வழக்கில் நன்மை தீமைகள் மற்றும் மக்களின் ஒருமித்த கருத்து ஆகியவற்றை நாங்கள் கவனத்தில் கொள்வோம்.

பின்னர் எது சிறந்தது என்பதைப் பரிசீலிப்போம் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 700 | 600 | 500 | 600-700 | 600 |
| உருளைக்கிழங்கு | 200 | 250 | 270 | 280 | 300 |
| பச்சைமிளகாய் | 1500 | 1200 | 1200 | 1200-1300 | 1000 |
| தக்காளி | 500 | 500 | 500 | 250-300 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 240 | 200 | 240 | 130-150 | 200 |
| கோவா | 350 | 350 | 300 | 250 | 300 |
| கரட் | 250 | 280 | 300 | 260 | 300 |
| பூசணி | 200 | 180 | 150 | 150 | 250 |
| புடோல் | 350 | 350 | 300 | 250 | 400 |
| வாழைக்காய் | 120 | 180 | 100 | 80-100 | 300 |
| சின்ன வெங்காயம் | 300 | 350 | 350 | 150-350 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 300 | 250 | 370 | 300 |
| பாகற்காய் | 1800 | 1800 | 2000 | 2000 | 2000 |
| வெண்டக்காய் | 350 | 300 | 200 | 250 | 400 |
| கருணைக் கிழங்கு | 160 | 140 | 150 | 150 | 200 |
| பயற்றங்காய் | 800 | 600 | 400 | 800 | 800 |
| லீக்ஸ் | 400 | 400 | 300 | 320 | 500 |
| பீற்றூட் | 350 | 350 | 400 | 250 | 450 |
| கறிமிளகாய் | 800 | 800 | 800 | 600 | 800 |
| முருங்கைக்காய் | -- | -- | 2000 | -- | 2000 |
| போஞ்சி | 600 | 350 | 400 | 450 | 400 |
| கத்தரிதம்புள்ள | 700 | 450 | 400 | -- | 400 |
| கீரை - 1 பிடி | 150 | 180 | 250 | 150-200 | 250 |
| தேசிக்காய் | 600 | 450 | 400 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 170 | 210 | 200 | 90-160 | 150-200 |
| இராசவள்ளி | -- | 800 | 600 | 700 | 1200 |
| வெங்காயப்பூ | -- | 800 | 500 | -- | -- |
| முள்ளங்கி | 220 | 300 | 200 | 100 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 150 | 100 | 80 |
| வல்லாரை | 60 | 350 | 100 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | 80 | 100 | 80 | 150 |

# இன்று ஒரு தகவல் 287



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# நோன்பு

ஒரு தேர்! அந்த தேரிலே 5 குதிரை பூட்டியிருந்தது. அந்தத் தேர் போய் சேர வேண்டும் என்றால் 5குதிரையும் ஒரே வேகத்திலே போக வேண்டும்! ஒரே திசையில் போகவேண்டும்.

ஒவ்வொன்றும் ஒவ்வொரு திசையிலே போனாலும் ஆபத்து! ஒவ்வொன்றும் ஒவ்வொரு வேகத்தில் போனாலும் ஆபத்து! அது சரி எங்கே இருக்கிறது என்று கேட்கிறீர்களா? நமது சரீரம் தான் அந்தத் தேர். ஐம்புலன்களுக்கு சொல்கிறோமே மெய், வாய், கண், மூக்கு, செவி அது ஐந்தும் 5 குதிரைகள். அது ஐந்தும் ஒரே திசையில் போக வேண்டும். அதை மறந்துவிட்டு கை ஒன்று வாய் ஒன்று பேச கண் ஒன்று பார்க்க இப்படி இருந்தால் வாழ்க்கை எப்படி ஆகும்?

வாழ்க்கையை நெறிப்படுத்துவதற்கான ஒரு முயற்சி தான் நோண்பு. நோண்பு என்பது உலகம் முழுவதும் எல்லா மதமும் ஏதோ ஒரு வகையிலே வலியுறுத்திக் கொண்டு வருகிற விடயம். இஸ்லாமும் இதை ஒரு முக்கிய கடமையாக வலியுறுத்துகிறது.

புனித நோன்பு உணர்ச்சிகளை ஒரு கட்டுப்பாட்டுக்கு கொண்டு வருகிறது ஆன்மாவை தூய்மைப்படுத்தி ஒளிரச் செய்கிறது.

தொழுகைக்கு சுவையளிக்கிறது. உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதற்கு மிகவும் உதவுவது. ஏழை எளியவர்கள் வறியவர்கள் இவர்கள் மேலே அனுதாபம் கொள்ள கற்றுக் கொடுக்கிறது . நோன்பு இருக்கிறது என்றால் மருத்துவ ரீதியாகவே பல மாறுதல்கள் உடம்பில் ஏற்படுகிறது.

இரத்த அழுத்தத்தை அது குறைக்கிறது. இரத்தக் கட்டியை கரைக்கிற சக்தியை இரத்தத்திலே அதிகப்படுத்துகிறது. Myocardial Infraction ஏற்பட உயிரிழப்பு பாதியாக குறைகிறது. தண்ணீர் சாப்பிடாமல் இருக்கிறபோது பிட்யூட்டரி சுரப்பியின் பின்பகுதி Anti Diuretic Harmone ஐ சுரக்கிறது. வெளியாகிற Urine அளவை இது குறைத்துவிடும். அதனாலே உடம்பில் தண்ணீர் சேமிக்கப்படுகிறது. நோன்பு காலத்திலே Blood Sugar சீராக ஒரே அளவாக இருக்கிற மாதிரியும் உடம்பு சரிப்படுத்திக் கொள்ளும். இப்படி இது மட்டுமில்லை இன்னும் எவ்வளவோ சரிப்படுத்தல்கள் உடம்பிற்குள் நடக்கிறது. நோன்பு என்றால் சாப்பிடாமல் இருக்கிறது தண்ணீர் குடிக்காமல் இருக்கிறது மட்டும் இல்லை. உலக சுகங்கள் போகங்கள் வேண்டாம் என்று ஒதுக்கிறது. அடுத்தவர்கள் மேலே அனுதாப உணர்வு வளர்த்துக் கொள்வது. சகிப்புத் தன்மையை வளர்த்துக் கொள்ளவும் நோன்பு துணையாக இருக்கிறது. உலகத்திலே மனிதர்கள் ஒருவரை ஒருவர் சரியாக புரிந்து கொள்வதனாலேயே தான் பலவிதமான பிரச்சினைகள் உண்டாகின்றது. மனிதனுக்கு நிம்மதி குறைவதற்கு இது தான் காரணம்.

பிரச்சினையை சரியாக புரிந்து கொள்ளும் திறமை நம்மிடம் இருந்தால் அதை உடனடியாக தீர்த்துக்கொள்வதும் சுலபமாக இருக்கும். மனிதனை மனிதன் சரியாக புரிந்து கொள்ளும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொடுக்கிறது நோன்புதான். இந்த நோன்பு இறைவனுக்கு நாம் மிகவும் நெருக்கமாக இருக்கிறோம் என்ற உணர்வை ஏற்படுத்துவது தான் நோன்பு. இதுவரைக்கும் நாம் பேசிக் கொள்வது இறைவன் பேரிலே நம்பிக்கை உள்ளவர்கள் கடைப்பிடிக்கிற நோன்பு பற்றி!


இது எல்லாம் இருக்கட்டும் இறைவன் பேரில் நம்பிக்கையை இல்லாத ஒருவர் சாப்பிடாமல் இருக்க வேண்டும் என ஆசைப்பட்ட கதை ஒன்று உங்களுக்கு தெரியுமா? அவருக்கு ஒருவர் நமது வயிற்றை நிரப்புவது ஆண்டவன் தான் அப்படி என்றார். அது எப்படி அவர் வந்து நிரப்புவர் நாம் தானே கையால் எடுத்து சாப்பிட வேண்டும் என்றார் இவர் அது மட்டுமில்லை அதை சோதித்து பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டான். உடனே மனைவியிடம் போனான். கட்டுச் சோறு கட்டி எடுத்தான். ஒரு பொட்டலம் கட்டி எடுத்துக் கொண்டான். நேராக மனிதனே இல்லாத ஒரு பாலைவனத்துக்கு போனான். ஒரு இடத்திலே உட்கார்ந்தான். சோற்றுப் பொட்டலத்ததை முன்னாடி வைத்தான். நான் அதை கையாலே தொடப் போவதில்லை நானே சாப்பிடப்போவதில்லை ஆண்டவன் எப்படி என் வயிற்றை நிரப்புவார் பார்க்கலாம் என்றான். கையை கட்டிக்கொண்டு கண்ணை மூடிக்கொண்டு பேசாமல் உட்கார்ந்து கொண்டான். கொஞ்சநேரம் ஆகி விட்டது அந்த பக்கமாக இரண்டு ஆசாமிகள் வந்தார்கள். அவர்களுக்கு அகோரப்பசி இரண்டு பேரிலே ஒருத்தன் அந்த பொட்டலத்தை எடுக்கப் போனான். இன்னோருவருக்கு சந்தேகம் இவன் ஏன் பொட்டலத்தை வைத்துக் கொண்டு சாப்பிடாமல் உட்கார்ந்து இருக்கிறான். ஒரு வேளை இதிலே விஷம் கலந்து இருக்குமோ என்றான்.

இருந்தாலும் இருக்கும் என்றான் இன்னோருவன். அந்த நபரிடம் கேட்போம் என்றான். பேச்சுக் கொடுத்து பார்த்தான். அந்த ஆள் பேசவே இல்லை சந்தேகம் வலுத்தது. இரண்டு பேரும் அந்த ஆளை வலுக்கட்டாயமாக பிடித்துக் கொண்டு வாயிலே சாப்பாட்டை திணித்தார்கள். வேறு வழியில்லை சாப்பிட்டு விட்டான். இப்போது அந்த நபருக்கு வயிற்றை நிரப்பினது யார்? யோசித்து பாருங்கள் அதற்கு பின்பு அந்த பொட்டலத்திலேஇருந்தது முழுவதையும் அந்த இரண்டு பேரும் முடித்து விட்டார்கள். இந்த நபர் ஆச்சரியபட்டு போய் உட்கார்ந்து இருந்தான். என்னப்பா இறைவனோட கருணையே நினைத்து ஆச்சரியப்பட்டுப் கொண்டு இருக்கிறாயா? என்று அவனைப் பார்த்து கேட்டார் பழைய நண்பர். அதற்கு அவன் நான் அதை நினைத்து ஆச்சரியப்படவில்லை. எப்போதும் நான் கஷ்டப்பட்டு சாப்பிடுகின்ற எனது வீட்டு சமையலை அவ்வளவு பிரியமாக அந்த இரண்டுபேரும் சாப்பிட்டார்கள் அந்த அளவுக்கு அதிலே என்ன இருக்கிறது அதை நினைத்து தான் திகைத்துப் போய் உட்கார்ந்து இருந்தேன் அப்படி என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைகை மொழியை அரச மொழியாக அங்கீகரிக்க கோரி

## கவனயீர்ப்பு பேரணி



(கண்டாவளை)


கிளிநொச்சியில் சைகை மொழியை அரச மொழியாக அனைத்து இடங்களிலும் பயன்படுத்த வலியுறுத்தி கவனயீர்ப்பு பேரணியும் விழிப்புணர்வு கூட்டமும் நேற்று இடம் பெற்றது.

இலங்கையில் சைகை மொழி பேசுபவர்கள் இருக்கின்ற போதும் அந்த மொழிகள் அங்கீகரிக்கப்படாது அரச திணைக்களங்களிலும் ஏனைய இடங்களிலும் சேவை களைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருவதாகவும் அவர்களது சைகை மொழியை அங்கீகரிக்கக் கோரி குறித்த கவனயீர்ப்பு பேரணி முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி நகர விளையாட்டு மைதான முன்றலில் இருந்து ஆரம்பமான குறித்த விழிப்புணர்வு பேரணி பசுமை பூங்காவளாகம் வரை சென்றடைந்து அதனைத் தொடர்ந்து பசுமைப் பூங்காவளாகத்தில் விழிப்புணர்வுக் கூட்டம் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கலந்து கொண்டார். இதன் போது ஜனாதிபதிக்கான மகஜரும் கையளிக்கட்டது இலங்கையின் அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த சைகை மொழி பேசுபவர்கள் கலந்து கொண்டிருந்தனர். (6-315-316)

# இலங்கைக்கு கடத்தவிருந்த 450 கிலோ கடல் அட்டைகள் மீட்பு




(மன்னார்)

இலங்கைக்கு கடல் வழியாக கடத்துவதற்காக இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் அடுத்த வேதாளை தெற்கு தெருவில் உள்ள வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 450 கிலோ பதப்படுத்தப்பட்ட கடல் அட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் இராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் தனிப்பிரிவு பொலிஸாருக்கு மண்டபம் அடுத்த வேதாளை தெற்கு தெருவில் உள்ள வீட்டில் இலங்கைக்கு கடல் வழியாக கடத்துவதற்காகத் தடை செய்யப்பட்ட பதப்படுத்தப்பட்ட கடல் அட்டைகள் பதுக்கி வைத்திருப்பதாக கிடைத்த ரகசிய தகவலினையடுத்து 450 கிலோ கடல் அட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டன. (6-285)

# மன்னாரில் இடம்பெற்ற பண்பாட்டுப் பெருவிழா





(மன்னார்)

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகு ஏற்பாடு செய்த மாகாண பண்பாட்டுப் பெருவிழாவும் கண்காட்சியும் நேற்று முன்தினம் மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம் பெற்றது.


மன்னார் பிரதான பாலத்தில் இருந்து பண்பாட்டு ஊர்திகள், கலை ஆற்றுகைகள் பண்பாட்டு பவனியாக விழா மண்டபமான மன்னார் நகர சபை மண்டபத்தை வந்தடைந்தன.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் நா.வேத நாயகன், சிறப்பு விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் மற்றும் திணைக்கள தலைவர்கள், பிரதேச செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது வடந்தை 2024 எனும் நூல் வெளியீடும் அதனைத் தொடர்ந்து கலைக்குரிசில் விருது வழங்குதல், 2023 ஆம் ஆண்டிற்கான வடக்கு மாகாண சிறந்த நூலுக்கான பரிசு வழங்குதல், இளங்கலைஞர் விருது வழங்குதல் உள்ளிட்ட நிகழ்வுகள் இடம்பெற்றன. (6-285)

# வவுனியா சந்தை சுற்றுவட்ட வீதியில் நடைபாதை அமைப்பு

## விற்பனையில் ஈடுபட்டவர்களை அகற்றிய பொலிஸார்



(குருமன்காடு)

வவுனியா சந்தை சுற்றுவட்ட வீதியின் முகப்பு பகுதியில் நடைபாதை அமைக்கும் பணி நகர சபையால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை நேற்று அங்கு மரக்கறி விற்பனையில் ஈடுபட்ட வியாபாரிகள் பொலிஸாரால் அகற்றப்பட்டிருந்தனர்.

குறித்த பாதையில் இருபக்கமும் வியாபாரிகளால் ஆக்கிரமிக்கப்பட்டு சுகாதாரமற்ற வகையில் மரக்கறிகள் விற்பனை செய்யப்பட்டு வந்தது. இதனால் அந்தப் பாதையில் வாகன நெரிசலும் ஏற்பட்டுள்ளது.

இதனை கருத்தில் கொண்ட வவுனியா நகரசபை அந்த வீதியின் முகப்பு பகுதியில் நடைபாதை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-250)

# யாழ்.பொருளாதார மத்திய நிலையத்தை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

(சாவகச்சேரி)



தென்மராட்சியில் அமைந்துள்ள யாழ். பொருளாதார மத்திய நிலையத்தை உடனடியாக இயங்கவைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என இயற்கை நண்பர்கள் இயக்கம் வடக்கு மாகாண ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

யாழில் உற்பத்தி செய்கின்ற பொருட்களின் உள்ளூர் தேவைகள் போக எஞ்சியவற்றை தென்பகுதி நுகர்வோருக்கு விற்பனை செய்யப்பட்டு ஏற்றுமதி பொருட்களை நவீன களஞ்சிய வசதிகளுடன் களஞ்சியப்படுத்தி விற்பனை செய்யவும் யாழ். நுகர்வோருக்கு தேவையான தென்பகுதி உற்பத்திப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளவும் சகல உட்கட்டமைப்பு வசதிகளையும் கொண்டதாக குறித்த நிலையம் காணப்படுகிறது.

அங்கு சேரும் கழிவுகளை வெளியேற்றக்கூடிய பொறிமுறை என்பவற்றுடன் தொற்று நோய்கள் பரவுவதற்கான வாய்ப்புக்களும் தடுக்கக்கூடிய செயற்திட்டம் ஆகியவற்றுடன் இது இயங்குநிலைக்கு வருவதனை உறுதிசெய்ய வேண்டும் என்று விவசாயிகளின் சார்பாக வடக்கு மாகணசபையின் ஆளுநரை கேட்டுக்கொள்கின்றோம் என அக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர். (6-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர்

660



புலியாயிருந்தால் பேசுமா? வெளியில் வந்தால் புலி இருக்கும். ஒருவேளை மேலே பாய்ந்துவிடும் என்று அம்மா சொன்னாள். நான் புலி இல்லை. உன் பேரில் பாயவும் மாட்டேன் பயப்படாமல் வெளியே வா!"

பயமா? எனக்கு என்ன பயம்? என்று சொல்லிக் கொண்டே ஒரு சின்னஞ் சிறு குழந்தை இருண்ட மண்டபத்திலிருந்து வெளியே வந்தது. இதற்குள் மழை நன்றாக விட்டுப் போயிருந்தது. மேகங்கள் சிறிது விலகி நட்சத்திரங்களும் தெரிந்தன. நட்சத்திர வெளிச்சத்தில் அக்குழந்தையை வந்தியத்தேவன் பார்த்தான். சுமார் நாலு வயதிருக்கும். இருந்த வெளிச்சத்தைக் கொண்டு வெகு இலட்சணமான குழந்தை என்று தெரிந்து கொண்டான். இடுப்பில் ஒரு சிறிய பட்டுத் துணி உடுத்தியிருந்தது. கழுத்தில் ஒரு ரத்தினமாலை அணிந்திருந்தது.

பெரிய குலத்துக்குக் குழந்தையாக இருக்க வேண்டும். இதை இங்கே தனியாக விட்டுவிட்டுப் போன தாய் யார்? இங்கே எதற்காக வந்தாள்? ஏன் குழந்தையை விட்டுவிட்டுப் போனாள்?

இதற்குள் குழந்தையும் வந்தியத்தேவனை உற்றுப் பார்த்து விட்டு, "நீ குதிரை இல்லை, மனிதனைப் போல்தான் இருக்கிறாய்" என்றது.

"அதோ குதிரையும் இருக்கிறது, பார்!" என்றான் வந்தியத்தேவன். குழந்தை குதிரையைப் பார்த்தது: "ஓகோ! எனக்காகத்தான் கொண்டு வந்திருக்கிறாயா? பல்லக்கு வரும் என்றல்லவா சொன்னார்கள்?"

சிறுவனின் மறுமொழி வந்தியத்தேவனுடைய மனத்தில் பற்பல முரண்பட்ட எண்ணங்களை உண்டாக்கின. இந்தக் குழந்தை யார்? இவன் ஏன் இங்கே தனியாயிருக்கிறான்? இவ்வளவு சின்னஞ் சிறு பிள்ளை இப்படிச் சற்றும் பயப்படாமல் இருக்கிறானே அது ஆச்சரியமல்லவா? இவனுக்காக யார் பல்லக்கு அனுப்புவதாகச் சொல்லியிருந்தார்கள்? அது ஏன் வரவில்லை? இவனை விட்டுவிட்டுப் போன இவன் அம்மா யார்? அவள் எங்கே போயிருக்கிறாள்?

"குழந்தை! உன்னை ஏன் உன் அம்மா விட்டுவிட்டுப் போய் விட்டாள்?" என்று கேட்டான்.

அம்மா என்னை விட்டுவிட்டுப் போகவில்லை. நான்தான் அவளை விட்டுவிட்டு வந்துவிட்டேன்! என்றான் அந்தச் சிறுவன். ஏன் விட்டுவிட்டு வந்தாய்?

குதிரை ஒன்று ஓடி வந்தது. அதைப் பிடித்து அதன் மேல் ஏறிக்கொண்டு வரலாம் என்று நான் சொன்னேன். அம்மா கூடாது என்றாள். நான் அவளுக்குத் தெரியாமல் குதிரையைப் பிடிக்க ஓடி வந்தேன் அந்தக் குதிரை தானா இது?

இல்லை இது வேறு குதிரை. அப்புறம் எப்படி இங்கே வந்தாய்? குதிரை அகப்படவில்லை. அம்மாவையும் காணவில்லை. மழை அதிகமாக வந்தது. அதற்காக இந்த மண்டபத்துக்குள் வந்தேன். இருட்டில் தனியாக இருக்க உனக்குப் பயமாயில்லையா?

பயம் என்ன? தினம் இந்த மாதிரிதானே இருக்கிறேன்! புலிக்குக் கூடப் பயமில்லையா? அம்மாவுக்குத்தான் பயம் எனக்குப் பயம் இல்லை. நான் மீன், புலியை விழுங்கி விடுவேன்!

அடே! மீன் புலியை விழுங்குமா? நான் சாதாரண சின்ன மீன் இல்லை! பெரிய மகர மீன் திமிங்கலம்! புலி, சிங்கம் யானை எல்லாவற்றையும் விழுங்கி விடுவேன்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## திருடனைக் கண்டுடிப்பது எப்படி?



அக்பர் ஒரு நாள் பீர்பாலுடன் தோட்டத்தில் உரையாடிக் கொண்டே தோட்டத்தின் சிறிய கதவைத் திறந்து கொண்டு அரண்மனைக்குச் செல்ல நினைக்கையில் கதவருகே ஒரு பொற்கொல்லன் நின்று கொண்டு இருந்தான்.

அக்பரைக் கண்டதும் பணிவுடன் வணங்கினான். யார் நீ என்றார் அக்பர்.

நான் பொற்கொல்லன் பஜ்ரிதாஸ்! என்றான் அவன். உனக்கு என்ன வேண்டும்? என்று அக்பர் கேட்டார்.

ஐயா, என் வேலைக்குத் தேவையான அனைத்துத் தங்கத்தையும் ஓர் இரும்பு அலுமாரியில் பத்திரமாக வைத்திருப்பது என் வழக்கம்! பூட்டியிருக்கும் அந்த அலமாரியின் சாவி என்னிடம் தான் இருக்கும். நான் வேலையில் மும்முரமாக இருந்தால் என் பணியாளர்கள் நால்வரில் ஒருவனை அனுப்பி அலுமாரியின் பூட்டைத் திறந்து தங்கத்தை எடுத்து வரச் சொல்வேன். என்னுடைய நான்கு பணியாளர்களும் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் என்றான்.

அக்பர் நீ வைத்திருந்த தங்கம் திருட்டுப் போய்விட்டதா? என்று கேட்டார்.

ஆம் பிரபு! திருட்டுப் போன பத்து தங்கக் கட்டிகளின் விலை ஒரு லட்சத்திற்கும் மேல் இருக்கும் என்றான்.

மூன்றே நாளில் உன் தங்கம் உனக்குத் திரும்பிக் கிடைத்துவிடும் என்று சொல்லிவிட்டு அக்பர் நகர்ந்தார்.

அக்பர், திருடனைக் கண்டு பிடிக்கும் பொறுப்பை நகரக்காவல் தலைவரிடம் ஒப்படைத்தார்.

பொறுப்பை ஏற்றுக்கொண்ட நகரத் தலைவர் உடனடியாக பஜ்ரிதாசின் நான்கு பணியாளர்களையும்கைது செய்து சிறையில் அடைத்தார். இரண்டு நாள்களாக அவர்களை அடித்து, உதைத்தும் அவர்கள் தாங்கள் நிரபராதி என்றே சாதித்தனர்.

நகரத் தலைவர் என்ன செய்வதென்று அறியாமல் புலம்பிக் கொண்டிருந்தார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணங்களின் தன்மை மேன்மையடையும் போதே ஆசீர்வாதங்கள் நம்மை வந்தடைகின்றன.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே நீ ஆகிறாய்

உயர்ந்த எண்ணங்கள் எப்போதும் உயர்வைத் தரும். அதனாலன்றோ உயரிய சிந்தனைகளை மனதில் நினைக்க வேண்டும் என ஞானிகளும் யோகிகளும் கூறிவைத்தனர்.

ஆம், சதா நல்லதை நினைக்கும்போது நல்லதே நடக்கும். அதேபோன்று எதிர்மறையான சிந்தனைகள் எப்போதும் விபரீதமான விளைவுகளை ஏற்படுத்திவிடும்.

ஆகையால் எதிர்மறையான சிந்தனைகளை நாம் ஒருபோதும் நினைக்கலாகாது.

இதனாலேயே உள்ளுவதெல்லாம் உயர்வாக இருக்க வேண்டும் எனக் குறித்துரைக்கப்பட்டது.

அதேவேளை எதிர்மறைக் கருத்துக்கள் சம்பந்தப்பட்டவர்களை பலவீனப்படுத்திவிடும்.

ஆம், அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கம் இன்னும் ஒரு வருடத்துக்கு நீடிக்காது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கூறியுள்ளார்.

இவ்வாறு சஜித் பிரேமதாஸ கூறுவது நயத்தக்க நாகரிகமான அரசியல் அன்று.

ஆம், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டபோது அவருடன் போட்டியிட்ட சஜித் பிரேமதாஸ கணிசமான வாக்குகளைப் பெற்றிருந்தார்.

உண்மையில் இரண்டாவது விருப்பு வாக்குகள் எண்ணப்பட்டதன் ஊடாகவே அநுர குமார திஸாநாயக்கவின் வெற்றி உறுதி செய்யப்பட்டது.

அந்தவகையில் சிங்கள – தமிழ் மக்கள் சஜித் பிரேமதாஸவுக்குக் கணிசமான ஆதரவைத் வழங்கியுள்ளனர் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

அதேநேரம் பொதுத் தேர்தலின்போது ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு தமது பூரண ஆதரவை வழங்கி அநுர குமார தலைமையில் பலமான ஆட்சி அமைய வேண்டும் என மக்கள் விரும்பினர். இங்கு மக்கள் என்பது மூவினத்தவரையும் குறிப்பதாகும்.

ஆக, ஜனாதிபதித் தேர்தலின்போது சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களித்தவர்கள் பொதுத் தேர்தலில் அநுர குமார திஸாநாயக்கவின் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தனர்.

இஃது அந்த மக்களின் அறிவுபூர்வமான அரசியல் கடமை என்றே பொருள் கொள்ளல் வேண்டும்.

நிலைமை இதுவாக இருக்கும்போது; ஜனாதிபதித் தேர்தலில் தன்னை ஆதரித்த மக்கள் பொதுத் தேர்தலில் அநுரவின் கட்சிக்கு ஆதரவாக வாக்களிக்கும்போது, அதற்கு உரிய மதிப்பை சஜித் பிரேமதாஸ வழங்க வேண்டும்.

அதாவது அரசியல் மாற்றத்தின் பொருட்டு மக்களால் அமைக்கப்பட்ட, அநுர குமார திஸா நாயக்க தலைமையிலான அரசாங்கத்துக்கு சஜித் பிரேமதாஸ தனது மனப்பூர்வமான ஆதரவை வழங்குவதுதான் அவரின் தார் மீகக் கடமையாக இருக்கும்.

இதைவிடுத்து ஒரு வருடத்துக்குள் அநுரவின் அரசாங்கம் ஆட்சியை இழக்கும் எனக் கூறும்போது, அஃது ஜனாதிபதி அநுரவுக்கல்ல, சஜித் பிரேமதாஸவுக்கே எதிர்மறை விளைவை ஏற்படுத்தும் என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டும்.

# யாழ். போதனாவில் 170 சிற்றூழியர்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றது - அர்ச்சுனா எம்.பி

யாழ். போதனா வைத்தியசாலையில் 170 சிற்றூழியர்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாகத் தெரிவித்து பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் அர்ச்சுனா, மருத்துவர் சத்தியமூர்த்தியை யாழ்.போதனா வைத்திய சாலைப் பொறுப்புக்களில் இருந்து அகற்றுமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று (18) உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

யாழ்.போதனா வைத்தியசாலையில் மூன்று வருடங்களுக்கு முன்னர் எந்த வித ஒப்பந்தங்களும் இன்றி 170 இளைஞர்,யுவதிகள் சேவையாளர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு மாதாந்தம் 10 ஆயிரம் ரூபாய் சம்பளம் ஒதுக்கப்படும் எனத் தெரிவித்திருந்த நிலையில் குறித்த தொகை 5 மாதங்களே வழங்கப்பட்டிருந்தது. இது ஒரு மிலேச்சத்தனமான குற்றம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்ட பணியாட்களுக்கு சுகாதார அமைச்சர் வாய்மொழிமூலம் வாக்குறுதிகளை வழங்கியிருந்துள்ளார்.

இதையடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட பணியாட்கள் வைத்தியசாலை சென்ற போது வைத்திய சாலைப் பணிப்பாளர் தங்கமுத்து சத்தியமூர்த்தியால் மிலேச்சத்தனமாக மிரட்டப்பட்டு காவலாளிகளால் வெளியேற்றப்பட்டனர் என அர்ச்சுனா தெரிவித்துள்ளார்.

அதன்போது அவர்கள் தன்னுடன் தொடர்பு கொண்டு தீர்வினைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

அதற்கமைய, தான்பாராளுமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் வைத்திய சாலைக்குச் சென்ற போது மருத்துவர் சத்தியமூர்த்தி தன்னை தரக்குறைவான ஆளாக நடத்தி அவரின் அறிவுறுத்தலின் படி காவலாளி மற்றும் பொலிஸார் மூலமாக வெளியேற்றினார் என அர்ச்சுனா தெரிவித்துள்ளார். (ம-7)

# கல்வித் தகைமை தொடர்பான குற்றம் நிரூபிக்கப்பட்டால் பதவி விலகுவேன்

## நாமல் எம்.பி தெரிவிப்பு

தனது கல்வித் தகைமை தொடர்பான குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் பாராளுமன்றப் பதவியிலிருந்து விலகுவேன் என நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த அவமதிப்பு நாமல் ராஜபக்ஷவை இலக்காகக் கொள்ளவில்லை என்றும், முழுச் சட்ட அமைப்பையும் குறிவைத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் எனவே உடனடியாக விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் நாமல்ராஜபக்ஷ நீதிஅமைச்சரிடம் தெரிவித்துள்ளார்.

குளிரூட்டப்பட்ட அறையில் தனியாகப் பரீட்சை எழுதியது நிரூபிக்கப்பட்டால் சபையிலிருந்து விலகுவதாகவும், அதனை நிரூபிக்க முடியாவிட்டால் அமைச்சர் வசந்த சமரசிங்க அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் எனவும் நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் வசந்த சமரசிங்க பாராளுமன்றில் உரையாற்றிய போது, நாமல் ராஜபக்ஷ, குளிரூட்டப்பட்ட அறையில் பரீட்சை எழுதியதாகவும், பரீட்சை வினாத்தாள் முன்கூட்டியே வழங்கப்பட்டதாகவும், இணைய வசதியுடன் கூடிய கணனி வழங்கப்பட்டதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளதாகத் தெரிவித்தார்.

மேலும் நாமல் ராஜபக்ஷ முழு அரசியல் பலத்தைப் பயன்படுத்தி சட்டத்தரணியானார் என்றும் அமைச்சர் வசந்த சமரசிங்க பாராளுமன்றில் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அந்தவகையில், அமைச்சர் வசந்த சமரசிங்க முன்வைத்த குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கும் போதே, தனது கல்வித் தகைமை தொடர்பான குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் தான் பாராளுமன்றப் பதவியிலிருந்து விலகுவதாகப் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். (ம-7)

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பான வழக்கு

## எதிர்வரும் 31 ஆம் திகதி தீர்ப்பு

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பிலான வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் 31 ஆம் திகதி வழங்கப்படும் என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

அண்மையில் நடைபெற்று முடிந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் முதல் வினாத்தாளில் மூன்று வினாக்கள் கசிந்த சம்பவம் தொடர்பான விரிவான விசாரணையை எதிர்வரும் 31ஆம் திகதி அறிவிப்பதாக உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது

இந்த மனுக்கள் யசந்த கோதாகொட, குமுதுனி விக்கிரமசிங்க மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய உள்ளடங்கிய உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் ஆயம் முன்னிலையில் மூன்று நாட்களாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மனுதாரர் மற்றும் பிரதிவாதி சார்பில் அனைத்துச் சட்டத்தரணிகளின் வாய்மொழி விவாதங்கள் தற்போது முடிவடைந்துள்ளது.

எழுத்துமூல உரைகள் இருப்பின் அவற்றை நாளை (இன்று)காலை 9 மணிக்கு முன் சமர்ப்பிக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

அதன்படி இந்த மனுக்கள் தொடர்பான முடிவு எதிர்வரும் 31ஆம் திகதி அறிவிக்கப்படும் என நீதிமன்றம் தெரிவித்துள்ளது. (ம-7)

# கல்வித் தகைமைகளை சபையில் முன்வைத்த சஜித்

(கொழும்பு)

தாம் முன்வைத்துள்ள கல்வித்தகைமைகள் போலியானவை என நிரூபித்தால், பாராளுமன்ற உறுப்பினர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் அரசியல் பதவிகளில் இருந்தும் விலகத் தயார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது கல்வித் தகைமைகளை நேற்று சபையில் சமர்ப்பித்தார்.

தனது முன்பள்ளிக் கல்வியை செயின்ட் பிரிட்ஜெட்ஸ் கான்வென்டிலும், ஆரம்பக் கல்வியை புனித தோமஸ் ஆரம்பப் பாடசாலையிலும், தரம் 6 முதல் தரம் 9 வரை றோயல் கல்லூரியிலும் கற்றதாக எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

பின்னர் அவர் இங்கிலாந்தில் உள்ள மில்ஹில் கல்லூரியில் படித்ததாகவும் 1983 - 1984 ஆம் ஆண்டில், அந்த நாட்டில் பொதுத் தேர்வுக்குத் தோற்றியதாகவும், தேர்வில் 2 ஏ, 2 பி மற்றும் 3 சி பெற்றதாகவும் பெறுபேறுகளை காண்பித்தார்.

அத்துடன் உயர்தரப் பரீட்சையில் 2 பி சித்தியும் ஒரு சி சித்தியும் பெற்று சித்தியடைந்ததாக எதிர்க்கட்சித் தலைவர் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.


லண்டன் பொருளாதாரம் மற்றும் அரசியல் விஞ்ஞானப் பள்ளியில் நுழைந்து 1991 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் தனது பட்டப்படிப்பை முடித்ததாக எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.

பின்னர் அவர் அமெரிக்காவில் உள்ள மேரிலாண்ட் பல்கலைக்கழகக் கல்லூரிப் பூங்காவில் சேர்ந்தார் மற்றும் பொது மேலாண்மை குறித்த முதுகலைப் படிப்பில் சேர்ந்தார்.

இதேவேளை 2021 ஆம்ஆண்டு இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் இணைந்து முதுகலைப் பட்டம் கற்றதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றத்தில் தெரிவித்தார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் மூத்தூர் அகத்தியர் பற்றிய ஒரு கண்ணோட்டம்



*அகத்தியர் ஜனன தினமான மார்கழி ஆயில்ய நட்சத்திரத்தை முன்னிட்டு இக்கட்டுரையானது பிரசுரமாகிறது.*

தமிழ் இலக்கணத்தை உலகுக்கு அளித்த அகத்தியரின் வரலாற்றினை தமிழுலகம் நினைக்க மறந்துவிட்டதா? செந்தமிழ் மொழிக்கு சிறந்ததோர் இலக்கணமாகிய அகத்தியத்தைப் பல்லாயிரமாண்டுகளுக்கு முன்பே அளித்த பெருமையை அகத்தியருக்களித்து "அகத்தியன் பயந்த செஞ்சொல் ஆரணங்கு" என்று தமிழ்த்தாயைப் போற்றுகிறார்கள் பல அறிஞர்கள். அகத்தியரின் வரலாற்றுக் குறிப்புக்கள் பல நூல்களில் காணப்படுவதுடன் மருத்துவ இலக்கியங்களில் அதிகம் உள்ளன.

தமிழிலுள்ள புலத்துறை ஒவ்வொன்றிலும் அகத்தியரை முன்னவராகக் கூறும் மரபு ஒன்று பண்டு தொட்டு இருந்து வருகின்றது. அகத்தியரின் வரலாற்றுக் குறிப்புகள் பற்றியும் அவர் புரிந்த பல அருஞ் செயல்கள் பற்றியும் புராணங்கள், இதிகாசங்கள், தமிழ் இலக்கியங்கள். சைவத் திருமுறைகள், மருத்துவ இலக்கியங்கள் என்பன தெரிவிக்கின்றன.

அகத்தியரின் வரலாற்றுக்குறிப்புகள் பல துறைகளிலும் பல நாடுகளிலும் காணப்படுகின்றபோதிலும் எல்லாரையும் ஒருவராகவே தமிழ் நூல்கள் குறிப்பிடுகின்றன. சில ஆராய்ச்சியாளர்கள் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு இடங்களில் வாழ்ந்தவர்கள் ஆகையால் ஒருவராகக் கொள்வது ஏற்புடையதன்று என்று கருதுகிறார்கள். "ஆனால் வெவ்வேறு அகத்தியர் என்பதற்கும் ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை."

- தமிழ்ப்பேரவைகளின் அகத்தியர்
- முச்சங்கங்களின் அகத்தியர்
- முருக பக்தரான அகத்தியர்
- யோகம், ஞானம், இரசவாதம், வாகடம், வைத்தியம், காயகல்பம், சோதிடம், பூசை தீட்சை, ஆருடம், முதலியவைகளில் கூறப்படும் அகத்தியர்
- வாள், வில் போர்ப் பயிற்சிக் குருவாகிய அரசர்களின் குரு
- சிவன் கோவில்களைக் கட்டி சைவ நெறி பரப்பிய அகத்தியர்
- காட்டை அழித்து ஆற்றை வெட்டி குளத்தைக் கட்டி நீர்ப்பாசனம்,வேளாண்மை செய்வித்த அகத்தியர்
- கட்டடங்கள் நாடு நகர நிர்மாணம் நாகரிகத்தினை உருவாக்கிய அகத்தியர்

என்று அகத்தியர் பல செயற்கரிய அருஞ் செயல்களை செய்ததாகக் காணப்படுகின்றது. அவர் ஒருவரா அல்லது பலரா என்பதை வரலாற்று ஆய்வாளர்கள் தெளிவு படுத்தவேண்டும். அதுவரை தமிழ் நூல்கள் கூறுவதை நாம் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும்.

ஈழநாட்டில் அகத்தியரைப் பற்றிய குறிப்புக்கள், நூல்கள், வரலாற்றுச் சுவடுகள் அதிகம் காணப்படுகின்றன. இவை இந்தியாவில் காணப்படும் தமிழரின் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்டவையாகும். பல அறிஞர்களின் நீண்ட கால ஆய்வுகளின் படி அகத்தியரின் ஜென்மபூமி புகழ்பெற்ற ஈழநாட்டில் இலங்கையில் கிழக்கு கரையிலுள்ள மூதூரில் எனக் கண்டறியப்பட்டுள்ளது. இதற்கு சான்றாக புலத்தியசித்தர் வாழ்ந்த இடம் புலத்திய நகரம் எனப்பட்டது.

அது பொலநறுவா என்று அழைக்கப்படுகிறது. புலத்தியரின் சகோதரி லோபா முத்திரையை அகத்தியர் திருமணம் செய்தார். அவருக்கு சித்தர் என்ற மகன் உட்பட பன்னிரண்டு குமாரர்கள் இருந்தார்கள் எனவும் கூறப்படுகிறது.

அவர்களுள் சக்தர், கராம்பி,கௌசால்யர், சுமேதர்,மாபு,காந்தராயணர், இந்திரவாகு,திருதஸ்வர் என்ற எட்டு குமாரர்களின் பெயர்கள் மச்ச புரா ணத்தில் காணப்படுகிறது. லோபா முத்தி ரையும் சகலகலைகளையும்கற்றுதேறிய அறிஞை ஆவர். சிவவழிபாடு, முருகவழிபாடு, சூரியவழிபாடு ஆகியவற்றை அகத்தியர் தோற்றுவித்தார். அதேபோல இராஜராஜேஸ்வரியாக அம் மனைப் பாவித்து ஒன்பது நாட்கள் செய்யும் நவராத்திரி வழிபாடான சக்தி வழிபாட்டினை உலகுக்கு எடுத்து கூறியவர் லோபா முத்திரை ஆவர். நவராத்திரி வழிபாட்டில் கால ஓட்டத்தினால் சிலமாற்றங்கள் இன்று ஏற்பட்டுள்ளன. மூன்றாவது தமிழ்ப்பேரவை நடைபெற்றது தென் பொதியில் எனவும் பொதியில் முத்தூருக்கு தெற்கேயுள்ள பொத்துவில் ஆகும் என்பதுவும் ஒரு கருத்தாகும்.

இரண்டாவது தமிழ்பேரவை இலங்கையின் முல்லைத்தீவில் பேராறு என்னும் ஆற்றுக்கருகில் மணிமலையில் நடைபெற்றுள்ளதை தமிழ்விடுதூது என்ற நூல் தெரிவிக்கின்றது.

மூன்றாவது தமிழ் பேரவை பொதியிலில் குமரவேள் தலைமையில் தான் நடந்தது என அறியக்கிடக்கின்றது. இரண்டாவது தமிழ் பேரவையில் சாதாரண புலவராக இருந்த அகத்தியர் மூன்றாவது தமிழ் பேரவையில் முதல் புலவராக இருந்துள்ளார். வரலாற்று ஆசிரியர்கள் மூன்றாவது தமிழ் பேரவைக்காலத்தினை இற்றைக்கு 17000ஆண்டுகட்கு முன்னர் தொடங்கி 13000 ஆண்டுகள் வரை என்று கணிப்பிட்டுள்ளார்கள். குமரவேள் தலைமையில் தமிழ் பேரவை நடந்த காலத்தில் குமரவேள் முருகசாலம் என்ற மருத்துவ நூலை இயற்றினார் என்பதை பண்டிதர் க.முத்துக்கருப்பபிள்ளை குறிப்பிட்டுள்ளார். குமரம் என்ற இலக்கண நூலையும் இயற்றினார் எனலாம். "அகத்தியம்" என்ற 21000 பாடல்களை கொண்ட நூலை இக்காலத்திலேயே இயற்றி இருத்தல் வேண்டும். உடல், உள்ளம் இவற்றின் அமைப்பு தொழில், நோய், நீக்கம் ஆகியவை அகத்தியல் ஆகும். அகத்தியல் பற்றி கூறியதாலேயே அந்நூல் அகத்தியம் என்று அழைக்கப்பட்டது. இதன் பின்னர்தான் அவர் அகத்தியர் என அழைக்கப்பட்டார்.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3279

### நிதுஷன்




### மதுசன்




### நிதேஷ்





### நிதுசன்




### யாதவி




### மதிவதனி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணுவிலில்...

வயதுடைய அமுதலிங்கம் நிவேதன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த இளைஞன் வீட்டின் முன்புறம் உள்ள காணியில் நேற்று முன்தினம் இரவு இருந்துள்ளார். இதன்போது இரவு உணவுக்காக அவரது தாயார் குறித்த இளைஞனை அழைத்துள்ளார்.

இதன்போது அவர் வருவதாகக் கூறினார், இருப்பினும் வீட்டுக்குச் செல்லவில்லை.

பின்னர் உறவினர்கள் தொலைபேசி மூலம் அழைப்பு மேற்கொண்டவேளையும் தொடர்பு கிடைக்கவில்லை.

இந்நிலையில் அவர் நேற்றையதினம் வீட்டின் முன்னால் உள்ள காணியில் உள்ள மரம் ஒன்றில் தூக்கில் தொங்கியவாறு சடலமாகக் காணப்பட்டார்.

இந்நிலையில் அவரது மரணத்தில் சந்தேகம் இருப்பதாக உறவினர்கள் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

இதையடுத்து சுன்னாகம் பொலிஸார் நீதிமன்றத்தின் கண்காணிப்பின் கீழ் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33)

## பயங்கரவாத...

பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளார்கள்.

லண்டனில் இருக்கும் நபர்கள் அகதிகள் உரிமை கோரி அதற்கு இலங்கையில் வாழமுடியாததற்கான காரணம் என்ன என்பதை இங்கிருந்து போலியான முறையில் பயங்கரவாத குற்றத்தடுப்பு விசாரணைப்பிரிவு விசாரணைக்கு அழைத்துள்ளதான கடிதத்தினை வடிவமைத்து அதற்கு அச்சு அசேலாக இறப்பர் முத்திரையும் குத்தி ஒரு கடிதம் இரண்டரை இலட்சம் ரூபாவிற்கு பெற்று அனுப்பியுள்ளார்கள்.

இந்தத் தகவல் லண்டனில் அகதிகள் தஞ்சம்கோரிக்கையாளர்களின் விசாரணையினை மேற்கொண்ட அந்நாட்டு அதிகாரிகளின் ஊடாக முல்லைத்தீவுப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட முல்லைத்தீவுப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர்கள் செல்வபுரம், முல்லைத்தீவு என்ற முகவரியினை சேர்ந்த 28 மற்றும் 33 வயதுடைய இருவரைக் கைது செய்துள்ளார்கள்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது அவர்கள் அவ்வாறு போலியான கடிதம் தயாரித்து விற்றுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் நேற்று முன்னிலைப்படுத்தியபோது அவர்களை எதிர்வரும் 24 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டுள்ளது. சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார்கள். (ம-7)

## ரூ.100 மில்லி...

லில் இருந்த போது அங்கு அவருக்கு நிகழ்ந்த விடயங்கள் தொடர்பில் அவருக்கு அவதூறாக எதிராளி மருத்துவர் இராமநாதன் அர்ச்சுனாவினால் சொல்லப்பட்ட விடயங்கள் மற்றும் கடந்த 09ஆம் திகதி இராமநாதன் அர்ச்சுனா வைத்தியசாலைக்குள் நுழைந்து வைத்திய நிபுணர் சத்தியமூர்த்தியுடன் சில வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டு, அவருடன் பிணக்கிற்கு உட்பட்ட விடயங்கள் தொடர்பிலும், அன்றைய தினத்தில் இராமநாதன் அர்ச்சுனா தன்னுடைய முகப்புத்தகத்தில் வெளியிட்ட காணொளி ஊடாக அவதூறு பரப்பப்பட்டதாக மனுவில் சுட்டிக்காட்டப்பட்டது.

எதிராளியான இராமநாதன் அர்ச்சுனா தொடர்ந்து வைத்திய நிபுணர் சத்தியமூர்த்திக்கு எதிராக, அவருடைய மாண்பு மற்றும் கீர்த்திக்கு பங்கம் விளைவிக்கும் கருத்துக்களைத் தெரிவிப்பதாகவும் மன்றில் தெரிவிக்கப்பட்டது.

அவரால் கூறப்படும் கருத்துக்களில் எந்தவிதமான உண்மையும் இல்லை என்பதோடு அடிப்படை அறமற்ற நபர் ஒருவருடைய கருத்தாகும் என்று வழக்காளி சத்தியமூர்த்தி தனது சத்தியக்கூற்றிலே தெரிவித்திருந்தமை தொடர்பில் சட்டத்தினையும், நீதிமன்றங்களினால் வழங்கப்பட்ட தீர்ப்புக்களையும் சுட்டிக்காட்டி நீண்ட சமர்ப்பணம் வழக்காளி தரப்பில் மன்றில் முன்வைக்கப்பட்டது.

மேலும் வழக்காளியானவர் தனது சத்தியக்கூற்றிலேயே தனது நோக்கம் எதிராளியான இராமநாதன் அர்ச்சுனா பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலே, குடிமகன் என்ற வகையிலே அல்லது பொது நிறுவனங்களை பொறுப்புக்கூற வைக்க வேண்டும் என்ற நியாயமாக செயற்படும் இடத்து, அவற்றுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் பொய்யான வகையிலும், அவதூறான வகையிலும் அவரால் முன்வைக்கப்படும் கருத்துக்கள் தொடர்பில் கட்டளையாக்கப்பட வேண்டும் எனக் கோரப்பட்டிருந்தது.

குறித்த விடயங்களை செவிமடுத்த நீதிபதி வழக்காளியால் கோரப்பட்டவாறு, அவருக்கு எதிராக அவதூறான கருத்துக்கள் எதனையும் தெரிவிக்கக்கூடாது என எதிராளி இராமநாதன் அர்ச்சுனாவிற்கு இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்துள்ளார். இது ஒருமுகமாக வழக்காளி தரப்பை மட்டும் கேட்டு வழங்கப்படும் கட்டாணை என்பதால், இது தொடர்பான அறிவித்தல் எதிராளிக்கு வழங்கப்பட்டுள்ளது.

கட்டாணைஎதிர்வரும் 30ஆம் திகதி வரை வலிதாக இருக்கும். அன்றைய தினம் அதனை நீடிப்பதா? இல்லையா? என்பது தொடர்பிலான தீர்மானத்தினை நீதிபதி எடுப்பார். இது தொடர்பில் எதிராளி இராமநாதன் அர்ச்சுனாவிற்கு கட்டளையின் பிரதியையும், அறிவித்தலையும் வழங்குமாறு மன்று கட்டளையிட்டுள்ளது. (ம-7)

## 110...

இதுவரை 110 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 28 பேரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் 8 பேரும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்றைய தினம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 6 நோயாளர்களும் யாழ்.போதனா வைத்தியசாலையில் 5 நோயாளர்களும் எலிக் காய்ச்சலுடன் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 24 மணிநேரத்தில் இந்நோய் காரணமாக எந்தவொரு இறப்பும் ஏற்படவில்லை.

இதுவரை யாழ்.மாவட்டத்தில் இந்நோய் காரணமாக 7 இறப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## அடுத்த மாதம்...

விவகார அமைச்சர் விஜித ஹேரத் இந்தியாவில் வைத்து தெரிவித்துள்ளதாக "தி ஹிந்து" செய்தி வெளியிட்டுள்ளது.

அத்துடன் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள அரசாங்கம் "இருதரப்பு-கூட்டுவெற்றி" என்ற கோட்பாட்டுடன் அனைத்து நாடுகளுடன் உறவுகளைப் பேணவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார் என்றும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2024.12.18
சீட்டிழுப்பு இலக்கம் 5689
R 8 0 9 2 4 1
அத சம்பத R 9 2 4 1
சீட்டிழுப்பு இலக்கம் 264
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.12.18
சீட்டிழுப்பு இலக்கம் - 1719
B 23 30 42 52 B
Double Chance 44287

மெகா பவர்
திகதி 18/12/2024
சீட்டிழுப்பு இலக்கம் 2037
J 20 10 35 41 63
Double Chance 172910

லக்கி 7 VIP
திகதி 2024.12.18
சீட்டிழுப்பு இலக்கம் 515
J 9 4 4 5 1 4 J

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3931
சீட்டிழுப்பு திகதி 18.12.2024
C 32 46 62 72
C 119619
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.12.18
சீட்டிழுப்பு இலக்கம் 998
கன்னி 20 21 30 43 கன்னி
164542 19

உத்தியோகபூர்வ முடிவுகள்
18.12.2024 வெற்றி வாரம் 397
V 8 7 6 6 6 1
27738
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.27,461,415.20
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2663
சீட்டிழுப்பு திகதி 2024.12.18 தினம் புதன்கிழமை
08 16 45 57 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.74,600,899.20

சனிதா
திகதி 18.12.2024 வெற்றி வாரம் 4824
28 52 62 71 B
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,787,917.20
54361

ஜயோதா Jayoda
திகதி 2024.12.18 வெற்றி வாரம் 2087
11 14 34 38 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 26,878,932.40

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4375
சீட்டிழுப்பு திகதி 18.12.2024 தினம் புதன்கிழமை
13 36 41 62
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,233,824.40
103712

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
O 34 01 21 50 73
1839
18.12.2024 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.558,614,495.40

அட கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம்: 2489
சீட்டிழுப்பு திகதி: 2024.12.18
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.55,243,924.80
19 31 54 61 A
868757


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**PREGNANCY VOUCHER**

கர்ப்பிணித் தாய்மாருக்கான Voucher இற்குரிய பொருட்களை இப்போது Happy Super market உரும்பிராயில் கொள்வனவு செய்யலாம் (வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகம் - கோப்பாய் பதிவுள்ளோர் மட்டும்)

Happy Super market - உரும்பிராய்

077 780 8030

(647)

**விசாக்கான (Show money)**

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

குறைந்த சதவீதத்தில்%

- Visit visa
- Student visa
- Fixed & saving


சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்

தொடர்புகளுக்கு :

075 033 6759

(620)

# வடக்கு மாகாண சபைக்கு இரு செயலாளர்கள் நியமனம்



வடக்கு மாகாண சபைக்கு இரண்டுபுதியசெயலாளர்களுக்கான நியமனம் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்களால் நேற்றுப் புதன்கிழமை ஆளுநர் செயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளராக பொ.குகநாதன் அவர்களுக்கும், சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் செயலாளராக திருமதி ப.ஜெயராணி அவர்களுக்கும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனால் நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன.(ம,33)

**V2 VISA SERVICES**

**கனடா**

077 77 20 322

077 77 19 322

Visit Visas

Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention

வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-1852)

## க.பொ.த சா/த பரீட்சை திகதிகள் அறிவிப்பு

2024 (2025) கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை நடைபெறும் திகதிகள் வெளியாகியுள்ளன.

2025ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை சாதாரண தரப் பரீட்சை நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான மேலதிக தகவல்களை 1911, 0112784208, 0112784537 மற்றும் 0112786616 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ம-7)

**பணியாளர்கள் தேவை**

கொடிகாமம் நகரில் அமைந்துள்ள பான்சி கடைக்கு ஆண் மேற்பார்வையாளரும் பெண் பணியாளரும் தேவை.

அண்மித்த பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது மற்றும் ஆண் பணியாளர் 50 வயதிற்கும் 60 வயதிற்கும் இடைப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: **077 8118 948**

(C-1854)

**கண்ணீர் அஞ்சலி**



கல்லாரை மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

**திருமதி சின்னராசா பரமேஸ்வரி**

எமது சங்கத்தின் அங்கத்தவரும் தற்போதைய நிர்வாக சபை உறுப்பினருமான திரு.சின்னராசா-கிருஸ்ணகுமார் அவர்களின் அன்பு தாயார் அமரர் திருமதி. சின்னராசா பரமேஸ்வரி, 18.12.2024ம் திகதி மரணமடைந்துள்ளார். இவரது குடும்பத்தினருக்கும், உற்றார் உறவினர்களுக்கும் எமது சங்கத்தின் அங்கத்தவர்கள், பணிப்பாளர்கள், பணியாளர்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

மண்ணில் 17.02.1948

விண்ணில் 18.12.2024

பிரிவால் துயருறும்...

அங்கத்தவர்கள், பணிப்பாளர்கள், பணியாளர்கள்,

சுன்னாகம்.ப.தெ.வ.அ.கூ.சங்கம்,

(மின்சார நிலைய வீதி, சுன்னாகம்)

(C-1849)

**DISTRICT SECRETARIAT, JAFFNA**

**INVITATION FOR BIDS - (IFB-06)**

Department Procurement Committee of Jaffna District Secretariat called bids by **IFB 06 for Procurement of Services.** Please see the above mentioned Invitation for Bids (IFB-06) in **Daily News dated 17.12.2024** or on Jaffna District Secretariat **website www.jaffna.dist.gov.lk**

**Chairman,**
**Department Procurement Committee, District Secretariat, Jaffna**

(C-1850)

**அறுவடை இயந்திரங்கள் மற்றும் அறுவடை இயந்திரங்கள் ஏற்றிச்செல்லும் டொக்கு ஆகியன ஏல விற்பனை**

எமது மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்திற்கு சொந்தமான தற்போது நல்ல நிலையில் உள்ளதும் உடன் பயன்படுத்தக் கூடியதுமான G-68 வகை (குவாட்டா) G-70 வகை (குவாட்டா) ஆகிய இரண்டு அறுவடை இயந்திரங்கள் மற்றும் அறுவடை இயந்திரங்கள் ஏற்றும் டொக்கு இரண்டும் தனித்தனியாக ஏலக் கூறல் மூலம் 29.12.2024 அன்று காலை 10மணிக்கு எமது சிறுவர் இல்ல பிரதான வளாகத்தில் விற்பனை செய்வதற்கு 15.12.2024 அன்றைய இல்ல முகாமைக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப இயந்திரத்தினை பெறவிரும்புவோர் குறித்த திகதியில் குறித்த நேரத்திற்கு வருகைதந்து ஏலக் கேள்வியினை கோரி பெற்றுக் கொள்ளமுடியும்

அத்தோடு இவற்றினை நேரில் பார்வையிடவிரும்புவோர் விற்பனை திகதிக்கு முன் வாரத்தில் 07 நாட்களும் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 04 மணி வரை பார்வையிடலாம் என்பதனை அறியத்தருகின்றோம்.

குறிப்பு : தாங்கள் ஏலக்கேள்விமூலம் கோரிய தொகையினை அன்றையதினமே செலுத்தி உடன் இயந்திரங்களினையும் இல்ல வளாகத்திலிருந்து வெளிக்கொண்டு செல்லுதல் வேண்டும் என்பதோடு குறித்த ஏல விற்பனை தொடர்பில் எமது ஏலவிற்பனைக்குழுவின் தீர்மானமே இறுதியானதாக இருக்கும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

ஏலவிற்பனை நடைபெறும் இடம்
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லபிரதான வளாகம்
ஜெயந்திநகர்
கிளிநொச்சி
0214123118, 0773240950

(C-1851)

**யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில்**

**இன்று 13.12.2024 முதல் 31.12.2024 வரை**

**இந்தியன் செலக்ஷனின்**

**நத்தார்** மற்றும் **புதுவருட** ஜவுளிக் கொண்டாட்டம்

SPECIAL OFFER



~~1500/=~~ → 1000/=

~~3000/=~~ → 2000/=

~~3500/=~~ → 2500/=

~~4000/=~~ → 2800/=

~~6000/=~~ → 4000/=

சாறி Offer விசேட விலைக்கழிவு

நூற்றுக்கணக்கான டிசைன்களில் சாறிகள், சல்வார்கள், சல்வார் துணிகள், லெஹங்கா, டொப், பார்ட்டி புறெக் என ஏராளமான ஆடைத் தெரிவுகள்

**இம்முறையும் நத்தார், புதுவருடத்தை இந்தியன் செலக்ஷனுடன் கொண்டாடுங்கள்**

காலம் : 13.12.2024 முதல் 31.12.2024 வரை

இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.

(வாரத்தின் 07 நாட்களும் திறந்திருக்கும்)

(646)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.